# மக்கள் மறுவாழ்வு

**ஆண்டு சிறப்பு இதழ்**

மலர்: 3] ∴ செப்டம்பர் 1984 ∴ விலை 75 காசு ∴ [இதழ்: 1


## இலங்கையிலுள்ள இந்திய தூதரக மறுவாழ்வுத் துறைக்கு

# ஒரு விண்ணப்பம்

"தாயகம் திரும்பும் மக்கள் இங்கு வந்து அவதிபடாமல், தங்கள் மறுவாழ்வுத் திட்டத்தின் கீழ் உரிய உதவிகளையும், சலுகைகளையும் பெற்று தமது புதியவாழ்வை அமைத்து கொள்ளும் வகையில் முன்னேற்பாடான நடவடிக்கைகளை ஏற்பாடுகளை இலங்கையிலிருந்து வரும் போதே இந்திய தூதுவரகம் செய்து கொடுக்க வேண்டும்"—

இவ்வாறு (கொடைகானல்) தாயகம் திரும்பியோர் சங்கம் (சிராக்) இலங்கையிலுள்ள இந்தி'' தூதுவரகத்திற்கு ஒரு விண்ணப்பத்தை அனுப்பியிள்ளது.

அதில் அது எழுதியுள்ள விபரம் வருமாறு—

இலங்கை அகதிகளுக்கு மறுவாழ்வளிப்பு விசயத்தில் இங்குள்ளவர்கள் மெத்தனமாக உள்ளனர். இதனால் பிரச்சனைகள்லபதோன்றிய வண்ணமிருக்கின்றன அகதிகள் சொல்லொன்னாதுன் பங்களுக்கு ஆளாக்கப்படுகின்றனர்.

தாசில்தார்களுக்கும் புனர்வாழ்வு அதிகாரிகளுக்கும் கொடுக்கப்படும் கருணை மனுக்களை வருடக்கணக்கில் கடப்பில் போகிறனர் 10 வருடங்களுக்கு முன் வந்தவர்களுக்கு கூட இன்னமும் புனர்வாழ்வு வசதிகள்கிடைக்கவில்லை, இங்குள்ளவர்களின் உணவை தட்டிப்பறிக்க வந்தவர்களை போல் இங்குள்ள அதிகாரிகள் எங்களை நினைக்கிறார்கள் என்று எண்ணத் தோன்றுகிறது

எங்களின் இன்றைய கஷ்ட நஷ்டங்கள் அனைத்திற்கும் இந்திய ஹைகமிசன் பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டும் சிறிமா சாஸ்திரி உடன்படிக்கை கைெயெழுத்தாகிய சமயம் நாங்கள் இலங்கையின் வருமானத்தில் 65 சதவீதத்தை ஈட்டி தருபவர்களாக விருந்தோம். நாங்கள் நாடற்றவர்களாக கருதப்பட்டாலும் மனிதர்களாக மதிக்கப்படும் நல்ல நிலை அங்கிருந்தது. எங்களை கலந்து கொள்ளாமலேயே உடன்படிக்கை செய்யப்பட்டது. எங்களை கவர்வதற்காக நியாயமான புனர்வாழ்வு வசதிகள் பற்றி பறைசாற்றினீர்கள்.

ஆனால் இந்தியாவிலோ அனைத்தும் தலை கீழாய் நடக்கிறது எந்த வாக்குறுதியும் நிறைவேற்றப்படவில்லை. தெரு நாய்களைப் போல் தாய் நாட்டின் தெருக்களிலே நாம் அலைந்து திரிகிறோம். வியாபாரக் கடன் பற்றி சொல்லப்பட்டது. ஆனால் அதற்காக ருபா 5000 சொத்துடைய இருவர் பிணை நிற்க வேண்டுமாம்—

அகதிகளுக்கு யார் பிணை நிற்க வருபார்கள். விளைவு வியாபாரக் கடன் இல்லை.

நீங்கள் தொழில் கொடுக்கப்படும் என்றீர்கள் அதைப்பெறுவதற்கு சாதிச்சான்றிதழ்களும் வருமான சான்றிதழ்களும் தேவைப்படுகிறது. விளைவு தொழில் இன்றி தவிக்கின்றோம். குடும்பத்தில் ஒருவருக்கு அல்லது இருவருக்கு மட்டுமே தான் தொழில் என்று நியதி வேறு இங்கு வைத்திருக்கிறார்கள்.

விவசாயத்திற்கு நிலமும் கடனுதவிகளும் தரப்படும் என்றீர்கள் இந்த வட்டாரத்திற்குவந்த சிலருக்கு வருடங்கள் பல கடந்தும் இந்த உதவிகள் கிடைக்கவில்லை. கொண்டு வந்ததட்டு

(16-பக்கம் பாக்க)

---

### தாயகம் திரும்பியோர் வங்கி தேர்தல்:

## மக்கள் மறுவாழ்வு ஆசிரியர் வெற்றி

தாயகம் திரும்பியோர் கூட்டுறவு வங்கியின் 4வது பிரதிநிதித்துவ பேரவை சார்பாளர் (டெலிகேட்) தேர்தல் கடந்த மாதம் நடைபெற்றது.

திருச்சி தொகுதியில் நடந்த கடுமையான போட்டியில் மக்கள் மறுவாழ்வு ஆசிரியர் டி. எஸ். ராஜு அவர்களும் வெற்றி பெற்றார்.

திருச்சித் தொகுதிக்கு 17 சார்பாளர்கள் தெரிவு செய்யப்படவேண்டும் 17 பேருக்கு 22 பேர் போட்டியிட்டனர் கடுமையன போட்டிக் கிடையில் டி. எஸ் ராஜு அவர்களும் வெற்றி பெற்றார்.

மற்றும், டி. பாலகிருஷ்ணன் கே. கணேசன், எம். கோவிந்தசாமி, பி. கந்தையா, ஆர். கருப்பழகு, எஸ். லட்சுமணன், என். முனுசமி, எம். முருகேசு கே. முத்துலிங்கம், கே. நடராஜ் எம். ஏ. நடராஜன். கே ராமச்சந்திரன், வி. ராமசாமி பி சுப்பிரமணியம், கே. வீரப்பன், பி வேலாயுதம் ஆகியோர் வெற்றி பெற்றனர்

தாயகம் திரும்பியோர் ஐக்கிய தொழிலாளர் முன்னணியின் பொதுச் செயலாளர் திரு எம். ரத்னம் தோல்வி அடைந்தார்.

மற்றும் தோல்வி அடைந்தவர்கள், எம். ரத்னம், என். குருநாதன், எம். முத்துசாமி. எஸ். ராமச்சந்திரன், எம், தியாகராஜன் ஆகியோராவர்.

## வெற்றி பெற்றோர் பட்டியல்

இத்தேர்தலில் வெற்றி பெற்ற அனைத்து சார்பாளர்கள் 07 பேர்களாவர். இவர்களின் பட்டியல் அடுத்த இதழில் இடம் பெறும் ()

# மக்கள் மறுவாழ்வு

மலர் : 3 | செப்டம்பர் 1984 | இதழ் : 1


## மூன்றாவது ஆண்டில் மக்கள் மறுவாழ்வு

மக்கள் மறுவாழ்வு தனது இரண்டாவது ஆண்டைப் பூர்த்தி செய்து, மூன்றாவது ஆண்டில் (சரியாக சொல்வதென்றால் நான்காவது ஆண்டில்) அடி எடுத்து வைக்கிறது.

தாயகம் திரும்பும் மக்களுக்காக அம்மக்களுக்கு வழி காட்டும் நோக்கோடு வெளிவரும் இப்பத்திரிகை கடந்த காலங்களில் குறிப்பிடத்தக்க பணிகளை செய்துள்ளது.

தாயகம் திரும்புவோர்யார்? அவர்களது பிரச்சனைகள் என்ன? என்பவற்றையெல்லாம் தெரிந்து கொள்ளும் வகையில் செய்திகளையும் பிரச்சனைகளையும் வெளியிட்டு வந்துள்ளது.

செய்திகளை, பிரச்சனைகளை மட்டும் வெளியிடுவதை நோக்கமாக கொள்ளாமல், தாயகம் திரும்பிய மக்கள் இந்நாட்டில் தமது மறுவாழ்வை அமைத்துக் கொள்ளும் வகையில் வழிகாட்டும் செய்திகளையும் தகவல்களையும், கட்டுரைகளையும் வெளியிட்டு வந்துள்ளது. இதன் மூலம் பலர் பலன் பெற்றிருக்கிறார்கள் என்பது எமது குறிப்பிடத்தக்க சாதனை என்றே நம்புகிறோம்.

மேலும், நாம் ஆரம்பித்துள்ள 'சட்ட ஆலோசனை' போன்ற பகுதிகள் நெருக்கடிகளில் வாழும் தாயகம் திரும்பியோர் சட்டத்தின் மூலம் தமது பிரச்சனைகளை தீர்த்து கொள்ள முனைவதற்கு தூண்டு கோலாக அமைந்திருக்கிறது.

'மக்கள் மறுவாழ்வு' நிறைய சாதிக்கா விட்டாலும், தனது சக்திக் கேற்ப பல பணிகளை செய்து வந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

இது தனது மூன்றாவது ஆண்டை எட்டிப் பிடித்தும் இன்னும் பொருளாதார நிலையில் தடுமாறிக் கொண்டுதான் இருக்கிறது.

எமது பணி பரவ வேண்டும்; இதழ்கள் எங்கும் செல்ல வேண்டும் என்பதற்காக அதிகமாக பிரதிகள் இலவசமாக செல்கின்றன. தொடர்ந்து இதை நீடிக்க முடியாது இருக்கிறது. மக்கள் மறுவாழ்வுக்கு ஒவ்வொருவரும் சந்தா செலுத்துவதன் மூலமும் நன்கொடைகள் வழங்குவதன் மூலமும் சிறப்பாக வெளிவரவும், தொடர்ந்து எமது பணியை செய்யவும் நீங்கள் கரம் கொடுக்க கரம் நீட்டுகிறோம். O

### தாயகம் திரும்பியோர் கூட்டுறவு வங்கி

## இயக்குனர் குழு தீர்மானம்



தாயகம் திரும்பியோர் கூட்டுறவு வங்கியின் இயக்குனர் குழு கூட்டம் கடந்த 29-8-84 அன்று நடைபெற்றது.

இந்த கூட்டத்தில், தாயகம் திரும்பியோர் சார்பு இயக்குனர் திரு.எம்.ஆர் லிங்கம் பி.ஈ, எம் ஐ ஈ அவர்கள் சில தீர்மானங்கள் கொண்டு வந்தார் அத்தீர்மானங்கள் ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

அத்தீர்மானங்கள்—

∴ வங்கி கடன் பெற்று வேலைவாய்ப்பளிக்கும் சில கம்பனிகள் வேலைப் பெறும் தாயகம் திரும்பியோருக்கு ஒழுங்காக சம்பளம் வழங்குவதில்லை. இதனால் தாயகம் திரும்பியோர் அவதிப்படுகிறார்கள். இந்த அவதியை போக்கும் வகையில் வேலை பெறும் தாயகம் திரும்பியோருக்கு சம்பளம் ஒழுங்காக வழங்கும் வகையில் ஒருவருட சம்பளத்தை வங்கி பிடித்து' வைத்துக் கொள்வது என்று தீர்மானம் நிறைவேற்றியுள்ளது

∴ கடன் பெற்று வேலை வழங்கும் கம்பனி அவருக்கு உரிய வீட்டு வசதி செய்துக் கொடுக்க வேண்டும்

∴ வேலை வழங்கும் கம்பனிகள் எக்காரணம் கொண்டும் வேலை பெறும் தாயகம் திரும்பியத் தொழிலாளர்களை வேலை நீக்கம் செய்யக் கூடாது

∴ வங்கியிடம் கடன் பெற்று தாயகம் திரும்பியோருக்கு வேலை வழங்கும் பெரிய கம்பனிகளில் வங்கியின் அதிகாரி ஒருவர் இயக்குனராக நியமிக்க வேண்டும்.

∴ டோக்கன் சிஸ்டம் (பதிவு வில்லை முறை) கொண்டு வர வேண்டும்.

∴ ஜாப்கார்ட் திட்டம் கொண்டு வர வேண்டும்.

∴ 240நாட்கள்தொடர்ந்து வேலை செய்திருந்தால் வேலை நிரந்தரமாக்க வேண்டும் என தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. O

## வாழ்த்துகிறோம்

குடிபெயர்ந்தோர் மேம்பாட்டுக்கான சமூக நல சங்கத்தின் செயலாளரும் (இலங்கை) இலங்கைத் தொழிலாளர் கழகத்தின் முன்னாள் பொதுச் செயலாளருமான திரு செ. கலியப் பெருமாள் அவர்களின் புதல்வி செல்வி. க தேவகி (இளநிலை உதவியாளர், MC செங்கல்பட்டு)க்கும் செங்கை, திரு. கே. சாரங்கபாணியின் புதல்வர் செல்வன் சா வேங்கை முத்து (தென் ரயில்வே பிரிண்டிங் பிரஸ் சென்னை) க்கும் 27 8-84 அன்று மணமகன் இல்லத்தில் திருமணம் இனிதே நடந்து முடிந்தது.

மணமக்களை வாழ்த்துகிறோம்.

— ஆசிரியர்

## நீலகிரி கூடலூர் தாயகம் திரும்பியோர் மக்களின் கோரிக்கை

# முதலமைச்சருக்கு முற்போக்கு இயக்கம் வேண்டுகோள்!

'இலங்கையிலிருந்து தாயகம் திரும்பியவர்கள் சுமார் 3½ லட் குடும்பங்கள் தமிழகத்தில் குடியமர்ந்துள்ளனர். இவர்களின் பிரச்சனைகள் ஏனைய மக்களை விட வேறுபட்டதாகும் இவர்களுடைய பிரச்சனைகளை அரசுக்கும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் எடுத்துரைக்க கூடலூர் சட்டமன்ற தொகுதியை 'தாயகம் திரும்பியவர்களுக்கான தொகுதி' என்று அறிவிக்க வேண்டும். அல்லது எம்.எல்.சி நியமன பதவியோ வழங்கிட வேண்டும்'

இவ்வாறு தாயகம் திரும்பியோர் முற்போக்கு இயக்கம் தமிழக முதல்வருக்கு எழுதியுள்ள மனு ஒன்றில் மேற்கண்ட கோரிக்கையை விடுத்துள்ளது.


மேலும் பின்வரும் பல கோரிக்கைகளை முன் வைத்துள்ளதோடு தமிழக முதல்வரை நேரடியாக சந்திக்கவும் திட்டமிட்டுள்ளது.

அந்த கோரிக்கைகள்—

தமிழ்நாடு தேயிலை தோட்டக் கழகத்தில் அமைக்கும் பணி மற்றும் விஞ்ஞான தொழில் நுட்பப் பணிகளுக்கு தேர்வு செய்வதில் ஊழல் நடந்துள்ளது. இதனால்தாயகம் திரும்பியோர்களுக்கு தகுதி இருந்த போதிலும் அவர்கள் உதாசீனம் செய்யப்பட்டுள்ளனர். இது குறித்து விளக்கம் நேரடியாக சமர்ப்பிப்போம்.

அரசு அலுவலகர்கள் பதவிகாலம் முடிந்ததும் ரூபாய் 10,000/-கொடுப்பதை பொதுத்துறையான தமிழ்நாடு தேயிலை தோட்டக்கழக ஊழியர்களுக்கும் வழங்கிட வேண்டுகிறோம்.

தாயகம் திரும்பியவர்களின் குழந்தைகள் கல்வி பயில கொளப்பள்ளியில் உயர் கல்வி நிலையம் அமைத்திட வேண்டுகின்றோம்




# இலவச சட்ட உதவி-ஆலோசனை முகாம்

புதுக்கோட்டை, ரெனய்சன்ஸ் டிரஸ்ட், சென்னை புரவிடன்ட் டிரஸ்ட் ஆகியவை இணைந்து புதுக்கோட்டை, அறந்தாங்கி தாக்குடி கிராமத்தில் இலவச சட்ட உதவி முகாம் ஒன்றை சமீபத்தில் நடத்தியது.

ரெனய்ஸ்சன்ஸ் டிரஸ்ட், நிர்வாக டிரஸ்ட்டி திரு எம். எஸ். டி. சந்திரசேகரம் அவர்கள் முன்னின்று ஏற்பாடு செய்திருந்த இந்த முகாமை அறந்தாங்கி இலவச சட்ட உதவி மற்றும் ஆலோசனை கழக தலைவரும், மாவட்ட முன்சீப்புமான திரு ஈ சாமிராஜ் பி எஸ்சி, பி. எல் அவர்கள் ஆரம்பித்து வைத்தார்.

அறந்தாங்கி இரண்டாவது வகுப்பு மாஜிஸ்ரேட் திரு பி. நடராசன் பி காம். எல் எல், பி அறந்தாங்கி, பார்அசோஷிசன் தலைவர் ஏ. அப்துல் ஹமீது பி ஏ. பி. எல் அட்வகேட் என். பாலகிருஷ்ணன், பி எஸ்சி, பி. எல். அட்வகேட் எஸ் நவசிவாயம் பி ஏ. பி. எல். அட்வகேட் ஏ. கான் ஹமீது பி. ஏ. பி எல் மற்றும் ரெனய்ஸ்சன்ஸ் டிரஸ்ட் திரு. பி. மகாலிங்கம், ஒருங்கிணைப்புப் பணியாளர் திரு எஸ் அழகர்சாமி ஆகியோர் இந்த முகாமில் கலந்துக் கொண்டனர்

ஏராளமாக பொதுமக்கள் இந்த முகாமில் கலந்து கொண்டு இலவச சட்ட நடவடிக்கைக்கு தமது மனுக்களை வழங்கியதோடு இலவச சட்ட உதவிகள், ஆலோசனைகள் பற்றி விளக்கம் பெற்றனர். ○

## தாயகம் திரும்பியோருக்கு ஒரு தொகுதி

இலங்கையில் இருந்து தாயகம் திரும்பியவர்கள் சுமார் 3½ லட்சம் (மூன்றரை லட்சம் குடும்பங்கள்) தமிழகத்தில் குடியமர்ந்துள்ளார்கள் இவர்களின் பிரச்சினைகள் ஏனைய மக்களைவிட வேறுபட்டதாகும். இவர்களுடைய பிரச்சினைகளை அரசுக்கும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் எடுத்துரைக்க கூடலூர் சட்டமன்ற தொகுதியை 'தாயகம் திரும்பியவர்களுக்கான தொகுதி' என அறிவிக்கவோ அல்லது எம்.எல்.சி. நியமன பதவியோ வழங்கிட வேண்டுகின்றோம்.

கூடலூர் பகுதியில் ஊரக வளர்ச்சித்திட்டத்தின் கீழ்

(8-ம் பக்கம் பார்க்க)

(3 ம் பக்கத் தொடர்ச்சி)

கறவை மாடுகள் வழங்க மானியம் ஒதுக்கீடு செய்துள்ளதில் மோசடி நடந்தது. தற்போது தமிழக அரசு (நிதியமைச்சர்) ஊரக வளர்ச்சித்துறை அரசு ஆணை எண் 880 தேதி 6-8-84ல் கூறப்பட்டுள்ளபடி புதிய கமிட்டி அமைக்கும்போது பதிவு செய்யப்பட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கத்தின் அங்கத்தினர்களை கமிட்டி உறுப்பினர்களாக சேர்த்துக் கொள்ளவேண்டும். அப்போதுதான் அரசின் பால் பெருக்குத் திட்டம் வெற்றியடையும். அதனால் சங்கத்தின் அங்கம் பெறுபவர்கள் பயன் பெறுவார்கள். சங்கத்தின் தலைவர்களை இந்த கமிட்டியில் சேர்க்க உத்திரவு பிறப்பிக்க வேண்டும். அத்துடன் மானியத்தொகை சங்கங்களின் கீழ் வங்கியில் இருசால் செய்ய வேண்டும்.

## மறுவாழ்வு உதவிகள்

புனர்வாழ்வுத் திட்டத்தின் கீழ் கூடலூர் பகுதியில் நிரந்தரமாக குடியமர்ந்துள்ளவர்கள் வியாபாரக்கடன், வீட்டுக்கடன் கொடுப்பதில் பல்வேறு காரணங்கள் காட்டி புனர்வாழ்வு உதவிகளை நிராகரிக்கப்படுகிறது. இவர்களுக்கு இதர மாவட்டங்களில் கொடுப்பதுபோல புனர்வாழ்வு உதவிகளை கொடுக்க வேண்டுகின்றோம்.

ஏற்கனவே இப்பகுதியில் வாழ்ந்தவர்களிடம் இருந்து தாயகம் திரும்பியவர்கள் விலை கொடுத்து வாங்கிய நிலங்களுக்கு பட்டா வழங்கிட வேண்டுகின்றோம்

பல கோடி ரூபாய் மதிப்புள்ள பொதுத் துறையான டேண்டீ நிர்வாகம் தன்னிச்சையாக செயல்படாமல் சீராகவும், செம்மையாகவும்செயல்பட ஒரு கண்காணிப்புக் குழுவினை அரசு உயர்மட்ட குழுவாக நியமிக்க வேண்டுகிறோம். அதில் தாயகம் திரும்பியோரும் இடம் பெற வேண்டும்.

ஜனத்தொகை அதிகமாக உள்ள கூடலூர் வட்டத்தை இரண்டாக பிரித்திட ஏற்கனவே அரசு உத்தேசித்துள்ளதாக அறிகின்றோம். அதன்படி பந்தலூரை தனி தாலுகாவாக பிரகடனம் படுத்திட வேண்டுகின்றோம்.

சுமார் 10,000 குடும்பங்கள் வாழ்ந்துவரும் கொளப்பள்ளியில் ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்திட வேண்டுகின்றோம்.

## சுயவேலை வாய்ப்பு திட்டத்தில்...

சுயவேலை வாய்ப்புத் திட்டத்தில் கீழ் மாண்புமிக தமிழக முதல்வரும் மாண்புமிகு பாரதப்பிரதமரும் அறிவித்துள்ள கடன் வழங்கும் முறையை கூடலூர் பகுதியில் தாயகம் திரும்பியோர்களுக்கும் கிடைத்திட ஆவன செய்திட வேண்டும் என்று கோருகின்றோம்.

தாயகம் திரும்பியவர்கள் அதிகமாக வாழக்கூடிய கொளப்பள்ளி அய்யன் கொல்லி, உப்பட்டி. பொன்வானி ஆகிய பகுதிகளில் உள்ள பஸ் பாதைகளை கிராம நெடுஞ்சாலைத்துறை மூலம் சீர் செய்திட கோருவது

1,200 க்கு மேல் மாணவர்களை கொண்ட கொளப்பள்ளி பஞ்சாயத்து நடுநிலைப் பள்ளி 75 சதவீதம் மாணவர்கள் ஹரிஜனர்கள். நடுநிலைப் பள்ளியில் அருகில் விடுதியில் தங்கிபடிக்க ஹரிஜன மாணவர்களுக்குவிடுதி கட்டிக்கொடுக்க வேண்டுகிறோம்.

தாயகம் திரும்பியோர்கள் அரசு தேயிலைத்தோட்டங்களில் பணிபுரிந்துக் கொண்டு இந்த ஊரில் பிறந்த ஒரு பெண்ணையோ, அல்லது இலங்கையில் இருந்து தாயகம் திரும்பியவணிகக் கடன்பெற்ற ஒரு குடும்பத்தில் திருமணம் முடித்த பெண்ணையோ டேண்டீயில் வேலை வாய்ப்பினை கோரி தன் கணவன் விண்ணப்பித்தால் அம்மனு நிராகரிக்கப்படுகிறது இதை பரிசீலிக்க வேண்டும்.

## டேண்டீயில் மீண்டும் வாய்ப்பு

தாயகம் திரும்பியோர்களுக்கு டேண்டீயில் அமைச்சுப் பணி மற்றும் நிர்வாகப் பணிகள் 980ம் ஆண்டுக்கு பின்பு கொடுக்கப்படுவது இல்லை. இதனால் தாயகம் திரும்பியவர்களுக்கு புனர்வாழ்வு திட்டத்தில் கீழ் அரசு ஆரம்பித்த இத்தோட்டங்களில் நோக்கம் நிறைவேறாது வசதி படைத்தவர்களுக்கும் சிபாரிசு பெறுபவர்களுக்கும் வேலை வாய்ப்பு கிடைக்கிறது இந்நிலை மாற வேண்டும். தாயகம் திரும்பியோர்களுக்கு முன்னுரிமை வழங்க வேண்டும்.

3 வருடங்களுக்கு ஒரு முறை டெபுடேஷன் அலுவலகர்கள் டேன்டீக்கு வந்து போவது மழைக்காலத்தில் ஒதுக்கிடத்தில் ஒதுங்குவது போல ஏனோதானோ என்ற நிலையில் இருந்து விட்டு போவதால் டேண்டீ தொடர்ச்சியாக நல்ல முறையில் செயல்பட முடியாமல் போகின்றது. இதனை தவிர்க்க இக்கழகம் தனிக்கழகமாக அரசின் கட்டுப்பாட்டில் கீழ் டெபுடேஷன் அலுவலகர்கள் அல்லாது கழக அலுவலர்களே பணிபுரியும் கூடிய ஒரு கழகமாக மாற்றக் கோருகிறோம்.

## கூடலூர் பகுதியில் டாப்கோ

கூடலூர் பகுதியில் சிதோஷ்ண நிலை மாற்றம் அடைந்துள்ளதால் இப்பகுதி முட்டைக்கான, இறைச்சிக்கான கோழிகள் வளர்க்க ஏற்றதாக இருப்பதால் டாப்கோ நிறுவனத்தில் கிளையை இப்பகுதியில் நிறுவிட வேண்டுகிறோம்.

தற்போது கூடலூர் பகுதியில் விதவைகள், அனாதைகள் பென்ஷன் 125 நபர்களுக்கு மட்டுமே கொடுக்கப்பட்டு வருகின்றது. இதனை 500 ஆக மாற்றிட உயர்ந்திட வேண்டுகின்றோம் என்று பல கோரிக்கைகளை அந்த மனுவில் தெரிவித்துள்ளனர்.


## எண்ணமே எழுந்து !

வானத்துப் பொன்மாலை சிந்தும்—எழில்
வண்ணங்கள் "மையாக" வேண்டும் அவ்
வண்ணங்கள் மையாகும் நாளில் கலை
வடிவங்கள் "எழுத்தாக" வேண்டும்;
ஏனென்னும் கேள்விக்குப் பின்னே—எழும்
எண்ணங்கள் "அச்சாக" வேண்டும்—அந்த
எண்ணங்கள் அச்சாகும் நாளில்—நம்
இதயங்கள் "ஏடாக" வேண்டும் !


அழகிய அச்சுப் பணிகளுக்கு
சிறந்த இடம் :

எம்ஜி கலை அச்சகம்


60, E.H. ரோடு, சென்னை-39.

அன்பன்
கோ. வேணுகோபாலன்


# கொடைகானலில் கண்டன ஊர்வலம், உண்ணாவிரதம்



கொடைகானலில் தாயகம் திரும்பியோர் சங்கம் நடத்திய கண்டன ஊர்வலம்,



கண்டன ஊர்வலத்தைத் தொடர்ந்து கொடைகானல் வட்டாட்சி அலுவலகம் முன் உண்ணு விரதம் இருந்த போது—



உண்ணு விரதம் முடித்து வைக்கப்பட்ட போது 'மக்கள் மறுவாழ்வு' ஆசிரியர் டி, எஸ் இராஜு அவர்கள் பேசும் போது எடுக்கப்பட்ட படம்.

கொடைக்கானலில் வாழும் தாயகம் திரும்பியோர். மற்றும் உள்ளூர் மக்கள் உட்பட 0 பேர் 81 7-84 அன்று கொடைகானல் வட்டாச்சியர் அலுவலகம் முன் உண்ணுவிரதம் இருந்தனர்.

கொடைக்கானல் பகுதியில் இலங்கையிலிருந்து, சிறிமாவோ சாஸ்திரி ஒப்பந்தத்தின் கீழ் வந்த தாயகம் திரும்பியோர் ஆயிரக்கணக்கான பேர் குடியேறி வாழ்ந்து வருகிறார்கள் மறுவாழ்வு திட்டத்தின் கீழ் இவர்களுக்கு செய்யப்பட வேண்டிய பல உதவிகள்–சலுகைகள் பல வருடங்களாக செய்யப்படாமலேயே இருந்து வருகிறது.

இந்த உதவிகளை– சலுகைகளை உடனடியாக அளிக்க வேண்டும் என்று கோரியும் கொடைக்கானல் வட்டாட்சியின் துணை தாசில்தார் ஒருவர் தாயகம் திரும்பியோர் சங்கத் தலைவரை அவமதித்ததைக் கண்டித்தும் 31-7 84 அன்று 800க்கு மேற்பட்ட தாயகம் திரும்பியோர் உண்ணுவிரதம் மேற்கொண்டனர்; ஆண்களும் பெண்களும் குழந்தைகள் உட்பட இந்த உண்ணுவிரதத்தை மேற்கொண்டனர். இந்த ஊர்வலத்திலும் உண்ணுவிரதத்திலும் மிகவும் ஆர்வத்தோடு, உள்ளூர் தொழிலாளர்களும் கூலி விவசாயிகளும் கலந்து கொண்டனர்; என்பது குறிப்பிடத் தக்கது.

உண்ணு விரதப் போராட்டத்தை முன்பாக இடம்பெற்ற ஊர்வலத்தில் ஆயிரத்திற்கு மேற்பட்டவர்கள் கலந்து கொண்டார்கள். இந்த உண்ணுவிரதத்தைப் போராட்டத்தை யொட்டி இதற்கு ஆதரவு தெரிவிக்கும் முகமாக தாயகம் திரும்பியோர் தொழில் செய்யும் பல காப்பித் தோட்டங்களில் ஒரு நாள் விடுமுறை வழங்கப்பட்டது குறிப்பிடத் தக்கது

கொடைக்கானல் தாயகம் திரும்பியோர் சங்கம் (சிராக்) முன்னின்று நடத்திய இந்த ஊர்வலத்தை, உண்ணுவிரதத்தை தொடர்ந்து கீழ்கண்ட கோரிக்கைகள் அடங்கிய மகஜரை கொடைக்கானல் வட்டாட்சியின் தாசில்தார் மணிவேல் அவர்களிடம் சமர்ப்பித்தனர். அக் கோரிக்கைகள் பின்வருமாறு :—

1. இதர பகுதிகளில் தாயகம் திரும்பியோர்புனர்வாழ் சம்பந்தமாகசெயல்பட தனி தாசில்தார் நியமிக்கப்பட்டிருப்பது போல, கொடைக்கானலிலும் தாயகம் திரும்பியோர் புனர்வாழ்வுபெற தனித் தாசில்தார் நியமிக்க வற்புறுத்துகிறோம்.

2. புனர்வாழ்வு திட்டத்தின் கீழ் 2ம் கட்ட வியாபாரக் கடனுக்கு விண்ணப்பிக்கும் போது, ரூபா 6,000- சொத்து மதிப்புள்ள ஜாமீன் கோருவது வேறு எங்கும் இல்லாதிருக்கும் போது இங்கு மட்டும் கோருவது உடனடியாக தடுத்து நிறுத்த வற்புறுத்துகிறோம்

3. தாயகம் திரும்பியோர்களுக்கான சான்றிதழ், ஜாதி சான்றிதழ், வருமான சான்றிதழ் மற்றைய பகுதிகளில் வழங்கப்படுவதுபோல கொடைக்கானலிலும் வழங்கிட வற்புறுத்துகிறோம்.

4. இப்பகுதி அரசு புறம்போக்கு நிலங்களில் தேயிலை, காப்பி பெருந்தோட்டங்களை அரசு பொதுத்துறையின் கீழ் அமைத்து தாயகம் திரும்பிய மக்களுக்கும், உள்ளூர் விவசாய தொழிலாளர்களும் நிரந்தர வேலை வாய்ப்பு வழங்கிட தமிழக அரசை வற்புறுத்துகிறோம்.

5 வியாபாரக்கடன் பெறுவதில் உள்ள இடைத்தரகர்களை தடுத்திடவும் வீடு கட்ட கடன் கிடைப்பதில் உள்ள இடர்பாடுகளை நீக்கிடவும் வற்புறுத்துகிறோம்.

6 தாயகம் திரும்பியோர்களுக்கு விவசாய நிலத்திற்கும் பயிர்சாகுபடி செய்து அறுவடை செய்யும்வரை மானியம் வழங்கிட மத்திய அரசு சிபார்சு செய்திருந்தபோதிலும், அதனை இம்மாவட்டத்தில் உதாசீனப் படுத்துவதை நாம் வன்மையாக கண்டிக்கிறோம் அரசு சிபார்சு செய்ததுபோல விவசாயத்திற்காக நிலமும். அறு

15 ம் பக்கம் பார்க்கவும்




# வேலை கிடைத்தும் வேலை இல்லை!

கடந்த 1980 ஆண்டு 194 குடும்பங்கள் ஆந்திரா மானில நெல்லூர் பவர்லூம் தொழில் சாலைக்கு இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் கீழ் தொழில் வாய்ப்பு பெற்று வந்தோம். நிர்வாகத்தினரின் திறமையின்மையால் தொழில் சாலை ஒழுங்கான முறையில் இயங்கவில்லை. அதனால் சுமார் 125 குடும்பங்களுக்கு மட்டும் நாள் ஒன்றுக்கு ரூபாய் 12/- வீதம் கூலியோடு வேலை கொடுத்துள்ளார்கள். எஞ்சிய 69 குடும்பங்களாகிய எங்களுக்கு கடந்த நான்கு வருடமாக மத்திய அரசு வழங்கும் சகாய பணம் 82-50 மட்டும் வழங்கி வந்தார்கள். எங்கள் பிரச்சனை மத்திய அரசோடும் மாநிலஅரசோடும் எத்தனையோ முறை மனு மூலம் தெரிவித்தோம் சத்தியாகிரகம் உண்ணாவிரதம் போன்றவற்றை மேற்கொண்டோம். இறுதியில் நீதிகேட்டு சென்னை மறுவாழ்வு துறையினரிடம் கடந்த 83ம் ஆண்டு மேமாதம் சுமார் 180 குடும்பங்கள் வந்து போரட்டம் நடத்தி 10 நாள் சிறையில் அடைபட்டோம். 10 நாட்களின் பின் விடுதலையாகி உயர் அதிகாரிகளின் பேச்சை நம்பிகொண்டு மீண்டும் அதே தொழிற் சாலைக்கு சென்றோம் எதுவும் கிடைக்கவில்லை. கடந்த டிசம்பர் மாதம் தமிழக அமைச்சர்கள் உயர் அதிகாரிகளை சந்தித்து எங்கள் பிரச்சனைகளை பேசினோம் அவர்களின் வாக்குறுதிபடி இன்று வரை எங்களுக்கு தொழில் வாய்ப்பு கிடைக்கவில்லை கடந்த நான்கு வருடமாக வழங்கி வந்த சகாய பணத்தையும் கடந்த ஜூலை மாதம் முதல் கொடுக்க படவில்லை. ஆகவே ஆந்திராவில் பட்டினி சாவு சாவதைவிட எங்களுக்கே பொறுப்பான மறுவாழ்வு துறையினரின் முன் பட்டினி கிடந்து சாவது மேல் என்ற முடிவோடு நாங்கள் 94 குடும்பங்களும் கடந்த ஒரு வாரமாக எழிலகத்தின் முன்னால் செத்து கொண்டிருக்கும் எங்களின் பிரச்சனையை தங்களின் மேலான கவனத்திற்கு கொண்டு வருகிறோம்

ராமச்சந்திரன்
திலகரத்தினம்

எழிலகம்
சென்னை.5
14-8-84

இது குறித்து தகுந்த நடவடிக்கை எடுக்கவும் விளக்கம் கேட்கும் உரிய அதிகாரிகளுக்கு எழுதப்பட்டுள்ளது.

# நியமனம் பெற்றும் வேலை கொடுப்பு மறுப்பு!

ஐயா,

நான் 1977ம் ஆண்டு இலங்கையிலிருந்து தாயகம் திரும்பிய அகதி, என்னுடைய PASS PORT No.C 294870. நான் அரசு பணியில் சேர என் பெயரை உதகை மண்டலம் வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்திருந்தேன். 1983ம் ஆண்டும் 11 மாதத்தில் உதகை மண்டல அரசு பாலிடெக்னிக்கில் இளநிலை எழுத்தர் பதவிக்கு நியமனம் கிடைத்தது. அந்நிறுவனத்தின் செ.மு.நடவடிக்கை எண் 1880 நிறுவனம்83 2.11 1983 பணியில் சேர சென்றபோது என் சான்றிதழ் அப்பதவிக்கு பொருந்தாது என கூறி என்னை பணியில் சேரமறுத்து விட்டனர். நான் மாவட்ட கல்வி அதிகாரி, வேலை வாய்ப்பு வழங்கும் அதிகாரி, சென்னை கல்வி இயக்குநர், மற்றும் புனர் வாழ்வு அதிகாரி சென்னை ஆகியோருக்கு விவரமாக தபால் எழுதினேன் இது சம்பந்தமாக சென்னை கல்வி இயக்குனருக்கு ஒரு தந்தியும் அனுப்பினேன்.

ஆனால் இவை ஒன்றும் என்னை பணியில் சேர உதவவில்லை. என்னிடம் போதிய பணவசதி இல்லாத படியால் சென்னைக்கு வர முடியவில்லை இந்த வருடம் ஜூலை மாதம் என் வேலை வாய்ப்பு பெறும் அட்டையை புதிப்பிக்க மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகத்திற்கு சென்றபோது அதிகாரி எனது கார்ட்டை புதுப்பிக்க மறுத்து விட்டதோடு, எனக்கு அரசு பாலிடெக்னிக்கில் நியமனம் கொடுத்திருப்பதாகச் சொன்னார், நான் அந்த அலுவலரிடம் எனக்கு கொடுத்த நியமனத்தை அவர்கள் மறுத்து விட்டதோடு சமநிர்ணய சான்றிதழ் கேட்டு அலைக்கழிக்கிறார்கள் என்று கூறினேன். அதற்கு ஆவர். அரசு பாலிடெக்னிக் முதல் வரிடமிருந்து. நான் அப்பதவிக்கு நியமிக்கப்பட வில்லை என கூறி ஒரு கடிதம் வாங்கி வருமாறு சொன்னார், அக்கல்லூரி முதல்வர் என்னிடம் ராஜினாமா கடிதம் கேட்டார். நான் பதவியில் இல்லாமல் எப்படி தங்களுக்கு ராஜினாமா கடிதம் தரமுடியும் அதனால் நான் ராஜினாமா கடிதம் எழுதித் தர முடியாது என்று மறுத்துவிட்டேன். அவர் எனக்கு கடிதம் தராமல், நீ மீண்டும் சென்னைக்குப் போய். சமநிர்ணய சான்றிதழ் வாங்கி வந்து பணியில் சேர்ந்துக் கொள்ளுமாறு பணித்தார். ஐயா, இக்கல்லூரி முதல்வர் என்னை கடந்த 9 மாதமாக பணியில் சேர மறுத்துவருகிறார் இவரிடம் இந்த நடவடிக்கையால் என் வேலை வாய்ப்பு அலுவலகத்தில் என்பதிவும்காலவாதியாகி விடும் நிலைக்கு வந்துவிட்டது. அகதியாக வந்த என்னை இத்தனை கஷ்டத்திற்கு ஆளாக்கி விட்டு அவர்கள் அமைதியாக இருக்கிறார்கள்.

ஐயா, நான் இலங்கையில் 1962 ம் ஆண்டு GCEல் 4 (நான்கு)பாடங்களில் சித்திப் பெற்றேன். அதன் பின்னர் பாடசாலை அதிபர் என்னை மேலும் இரு பாடங்களை மொத்தமாகவோ, தனித்தனியாகவோ எழுதி C...E யை பூர்த்தி செய்யுமாறு பணித்தார், அதன்படி நான் இரு பாடங்களையும் எழுதி பூர்த்தி செய்து விட்டேன் நான் பெற்ற தகுதியை தமிழக அரசு ஆணைப்படியும் உறுதி செய்கிறது ஆனாலும் இவர்கள் என்னை பணியில் சேர மறுத்துவிட்டதோடு, மீண்டும் வேலைவாய்ப்பு பெற வழியில்லாமல் என் எதிர்காலத்தை இருள் மயமாக்கி விட்டார்கள்.

ஐயா, தாங்கள் எனக்கு இவ்விடயத்தில் உதவி செய்து எதிர்கால வாழ்வு ஒளிமயம் பெற ஆவன செய்யுமாறு மிகவும் பணிவுடன் வேண்டுகிறேன்.

ரா. ராமையா

கோத்தகிரி

# ஒரு தொழிலை தேர்ந்தெடுங்கள்

ஒப்பந்த அடிப்படையிலும் அகதிகளாகவும் இந்திய திரும்பும் மக்கள் இங்கு அரசின் மறுவாழ்வு மூலமோ, சுயமாகவோ தமது வாழ்க்கையை அமைத்துக் கொள்கிறார்கள்-தமது பிழைப்புக்கும், பொருளாதார உயர்வுக்கும் பலதரப்பட்ட தொழில்களை செய்ய முன் வருகிறார்கள்.

ஆனால், முன் அனுபவம் இல்லாததாலும், எதை செய்வது என்று தெரியாமலும் தடுமாறுகிறார்கள்.

இவர்கள் செய்வதற்கு எத்தனையோ தொழில்கள் உண்டு மிக மிக சிறிய முதலீடு கொண்டும், பெரிய முதலீடு கொண்டும் இத்தொழில்களை செய்யலாம்.

தாயகம் திரும்பும் மக்கள் மறு வாழ்வு திட்டத்தின் கீழ் வியாபாரக்கடன் பெற்று என்னென்ன வகையான தொழில்களையெல்லாம் செய்யலாம் என்று 55 வகையான வியாபாரம், தொழில்களை வரையறை செய்து வைத்திருக்கிறது. அரசாணையிலுள்ள அந்த தொழிற்பட்டியலை இங்கு தருகிறோம்-

1 வெங்கள, செப்புப்பாத்திரக் கடை, 2. பிரட், பிஸ்கட் தயாரித்தல், 3. பால்பண்ணை வகைப் பொருட்கள் கடை, 4. முட்டை கடை, 5. பழக்கடை 6 அலுமினியப்பாத்திரம் தயாரித்தல், 7. பலசரக்கு (Crocary) கடை, 8. வெற்றிலை, பாக்கு மற்றும் குளிர் பானக் கடை, 9 தேநீர்கடை 10. எண்ணெய்க்கடை, 11. வளையல்கடை, 12. சைக்கிள் கடை 13 பிரம்பு பொருட்கள் தயாரித்தல், 14. பட்டன் தயாரித்தல், 15. இரும்புக் கடை,

16. பேனா பழுதுபார்த்தல் விற்பனை செய்தல், 17. மின்சாரப் பொருட்கள் விற்பனை 18. ரெடிமேட் விற்பனை மற்றும் தையல்கடை 19. மூக்குப் பொடிக் கடை, 20. மண்ணெய் விற்பனை

21. காய்கறி விற்பனை, 22. பிளாஸ்டிக் சம்பந்தப்பட்ட பொருட்கள் விற்பனை, 23 சாப்பாட்டுக் கடை. 24 எழுத்துப் பொருள் (Stationary) விற்பனை 25. 'ஜாதிக்காய் பெட்டி' செய்தல்

26. எம்பிராய்டரி (தையல்) வேலை, 27. வீட்டுத்தளவாட விற்பனை, 28. யூனானி வைத்தியம் கற்றல், 29. தட்டச்சு, 30. விறகுக் கடை,

31. கரி வியாபாரம் 32. ஒட்டுப்பலகை (PLYWOOD) வியாபாரம் 33. ரோஸ்வுட் வியாபாரம், 34 கடிகாரம் பழுதுபார்த்தல், 35. சுவர்கடிகாரம் விற்பனைக் கடை

36. பாதணி கடை. 37. மளிகை அல்லது மளிகையும் அழகு சாதன (FANCY) வியாபாரமும், 38. எவர்சில்வர் பாத்திரம் தயாரித்தல், 39. தையல்கடை 40 பேப்பர் (அச்சிடும் தாள்) வியாபாரம்.

41. பத்திரிகை விற்பனை 42. காப்பி(க்கொட்டை) வியாபாரம், 43. பால் டிப்போ, 44. காப்பிக்கடை, 45 கணக்குப் பதிவேடு, எழுத்துப் பொருட்கள் மற்றும் புத்தக பைண்டிங்கடை

46 வண்டியும் மாடும் 47 ஜட்கா வண்டியும் குதிரையும் 48. மிட்டாய் தயாரித்தல், 49. சில்லறை ஜவுளிக்கடை, 50. தகரபெட்டிகள், வாளி முதலானவை தயாரித்தல் 51. பார்பர் சாப்பு (SALOON) 52 பெட்டிக்கடை வியாபாரம், 53. ரேடியோ பழுதுபார்த்தல் 54 பனியன் வியாபாரம்

இத்தனை தொழில்களை வகைப்படுத்தியிருக்கிறது.

இத்தொழில்களில் ஏதேனும் ஒன்றை தேர்ந்தெடுக்கலாம் தாங்கள் வாழும் சூழலுக்கேற்ப, சாத்தியக் கூற்றுத்தக்கபடி இவற்றை செய்யலாம்.

முதலீடுக்கு தகுந்தவாறு தனியாகவோ, கூட்டாகவோ ஈடுபடலாம்.

ஒவ்வொரு மாவட்டத்திலும் தொழில் ஆரம்பிப்பதற்கு உரிய விபரங்களை பெற அரசின் சிறுதொழில் தகவல் நிலையங்கள் இருக்கின்றன. அல்லது சென்னையில்-கிண்டியிலுள்ள மத்திய அரசின் சிறு தொழில்கள் சேவை நிலையத்தில் நீங்கள் தேர்ந்தெடுக்கும் தொழில் பற்றிய தகவல்களை பெற்றுக் கொள்ளலாம்.

அத்தொழிலுக்குத் தேவையான பொருட்கள், முதலீடுகள் மற்றும் சந்தைப்படுத்தல் போன்ற பல விபரங்களை தெரிந்துக் கொள்ளலாம்.

நீங்கள் ஒரு தொழிலை தேர்ந்தெடுத்து உங்கள் மத்தியிலுள்ள படித்த—விசயம் தெரிந்த நபர்களை வைத்துக் கூட்டவோ— தனியாகவோ ஆரம்பிக்கலாமே! ()

*With best compliments from*

Phone: 514021

**NEELAMEGAM & SONS**
(SEA MENSHOP)

NO. 430, BURMA BAZAAR,
RAJAJI SALAI
(Opp. Hongkong Bank)
MADRAS-600 001.

Proprietor :
LION R. NEELAMEGAM

மக்கள் மறுவாழ்வு

## சந்தா விபரம்

ஆண்டுசந்தா ரூ. 10
தனிப்பிரதி 75 காசு

விவரங்கட்கு :

**மக்கள் மறுவாழ்வு**
1. தெற்கு கங்கையம்மன் கோயில் 2-வது தெரு,
சென்னை-600094

# ஓர் அகதியின்

எனது பூர்வீகம் புதுக்கோட்டை மாவட்டம், மறமடக்கி கிராமம். எனது பெயர் மீனாம்பாள் கணவர் பெயர் பழனிவேல் 4 தலைமுறைக்கு முந்தின பாட்டான் பாட்டிகள் இலங்கைக்குப் பிழைக்கப் போனார்கள்.

இலங்கை ஊவாமாகாணம் இப்பகலை எஸ்டேட்டில் 19 8-ல் நான் பிறந்தேன். பிறந்த பின் பெற்றோர் தனியார் எஸ்டேட்டுக்குப்போனார்கள் அங்கு கூலி 1.2. கூலி பற்றுமல் புறம்போக்கு நிலததில் விவசாயம் செய்து ஜீவித்தார்கள் பெற்றோருக்கு நான் ஒரே குழந்தை ஐந்தாம் வகுப்பு வரை படிக்க வைத்தார்கள்

14 வயதில் கல்யாணம் முடிந்து பதுளை தெல்பத்த எஸ்டேட்டுக்குப் போனேன் பெற்றோருக்கு உழைக்க முடியாமல் போனதால் என் வீட்டில் வைத்து பாதுகாத்தேன். 1965 ல் தந்தையும், 1967-ல் தாயும் இறந்துப் போனார்கள் நான் எஸ்டேட்டில் "ஆயா" வாக பணி புரிந்தேன் தினக் கூலி ரூ2.48 கணவன் பியூனாக பணி செய்தார் கூலி 3 ரூபாய்.

எட்டுக் குழந்தைகள் கணவர், நான், மாமனார் குழந்தைகள் மொத்தம் 11 பேரும் 20 3-78 ல் தாயகம் திரும்பினோம்

கண்டி ஹைகமிஷனில், சிவகங்கை, ஓ. புதூர் காலனியில் விவசாயத்திற்கு சிபார்சு செய்தார்கள் மண்டபம் முகாம வந்ததும் அதிகாரி "ஓ புதூர் காலனியில் ஸ்கீம் இல்லை. 50 குடும்பத்தை இன்றுதான் அனுப்பி வைத்தோம இந்த வருடம் முடிந்தால்தான் அங்கு வீடு கட்டித்தருவார்கள் அது வரை முகாமில் இருங்கள்" என்றார்.

முகாமை பற்றி அறியாத நாங்கள் முகாமிற்கு வந்தோம் கையிலிருந்த பணம் ரூபா 4 தான். கொண்டு வந்த பணம் ரூபா 2800க்கு புதுக்கோட்டை பேங்கில் இருந்து 30 நாட்கள் கழித்து தான் கிடைக்கும் என்றார்கள் 40ரூபாயும் 2 நாளில் முடிந்து விட்டது முகாமில் சாப்பாட்டுக்கு கொடுத்த ரூபா 75 ஒரு வாரத்தில் முடிந்து போய் விட்டது வறுமை தாங்காமல் ஐம்பது குடும்பங்கள் தாலுகா ஆபீசுக்கு சென்று எங்களுக்கு வேறு ஏதாவது வழி செய்து அனுப்பி விடுங்கள் என்று கெஞ்சினோம் தாசில்தார் நாளை வா நாளை வா என்று நாட்களைத்தான் கடத்தி வந்தார்.

தேங்காய் எண்ணெய் சோப்பு, குடை, கடிகாரம் என்று கொண்டு வந்த பொருட்களை விற்று மீத நாட்களில் கடற்கரையில் கொட்டிக் கழிக்கப்பட்ட மீன்களை சாப்பிட்டும் காலம் கடத்தினோம்.

முப்பது நாட்கள் கழிந்தன.

ஒரு முடிவும் இல்லை ஏற்கனவே வந்து, ஒரு வருடமாக முகாமில் தங்கியிருந்த (தாயகம் திரும்பியவரான) நல்லுசாமி என்ற தரகரிடம் சிக்கிவிட்டோம் அவர் "முக்கியமான இடங்களுக்கு மறு வாழ்வுக்காக மனுக்கள் கொடுக்க வேண்டும் இல்லாவிட்டால் நேரடியாக போக வேண்டும்" என்றார்.

கையில் காசு எதுவும் இல்லை அந்த நபரும், என் கணவரும் புதுக்கோட்டை போய் பேங்கிலிருந்து ரூபா 8 0/ எடுத்து வந்து மனுக்கள் கொடுத்தார்கள் திருச்சி மதுரை, ராமநாதபுரம், ஆலங்குடி என்று பல இடங்களுக்குப் போய் அதிகாரிகளைப் பார்த்து வந்தார்கள்.

பத்தே நாளில் ரூபா 7 முடிந்து விட்டது

5 குடும்பங்களும் முகாம் அலுவலகம் முன் போராடினோம் அதன் பிறகு புதுக்கோட்டை திருவரங்குளத்தில் 1974-ம் ஆண்டில காலனி அமைப்பார்கள் அங்கு போங்கள் என்று குடும்ப அட்டையில் எழுதி கொடுத்தார்கள் "ஒரு வருடம் வரை நாங்கள் என்ன செய்வது" என்று கேட்டோம். 'ஆலங்குடி கல்லுக்காரன்பட்டி என்ற இடத்தில் புறம்போக்கு நிலம் உள்ளது அதில் குடிசை போட்டிக்கொள்ளுங்கள் பக்கத்தில் வேலை கிடைக்கும், ஒரு வருடம் முடிந்ததும், திருச்சி கலெக்டர் குடும் பக்கார்டில் உள்ளபடி நிலம் தருவார்கள்' என்று சொல்லி ஆலங்குடி தாசில்தாருக்கு கடிதம் கொடுத்தார்கள் 4 நாட்கள் கழித்து குடும்பத்தோடு ஆலங்குடி தாசில்தாரைப் பார்த்த போது இங்கு புறம் போக்கு நிலம் இல்லை ஊருக்குக் சென்று உறவினர்கள் வீட்டிலாவது வாடகை வீட்டிலாவது போய் இருங்கள் என்று அனுப்பி விட்டார்.

மாமனாரின் சொந்த ஊருக்குப் போனோம் ஊரிலுள்ள பங்காளிகள் எங்களைப் பார்த்ததும் பதுங்கினார்கள். நிலத்தைப் பற்றி விசாரித்தோம். நிலமாவது கத்தரிக்காயாவது; முப்பாட்டன் விற்று விட்டு கண்டிப்பக்கம் போய் விட்டான். கொஞ்சம் இருந்தாலும் கணக்கன், மணியக்காரரைக் கூட்டி வந்துப் பார்க்கணும் ரூ2 கட்டவேண்டும் 4 பரப்புக்கும் தனியே ரூபா 100 கட்ட வேண்டும் என்றார்கள். எல்லாம் சய்துப் பார்த்த போது 16 குழி நிலம் கிடைத்தது. கேணி இல்லை கேணிக்கு ரூபா 00/-ம் மாட்டுக்கு ரூபா 00-ம் செலவிட்டு விவசாயம் செய்து பயிரான போது மழையில்லை. கேணியில் நீர் வற்றி எல்லாம் பாழாகி விட்டது வேலை எங்கும் கிடைக்கவில்லை, மாடுகளை விற்றுச் சாப்பிட்டோம்.

வியாபாரக் கடனுக்கு மனுச் செய்தோம், பயனில்லை கணவர் பேராவூரணிக்கு. கேணி வெட்டப்போய் நோயோடு திரும்பி வந்து சேர்ந்தார். ஒரு மகன் சேந்தான் குடி மனியகாரர் சைக்கிள் கடையில் மாதம் 20 ருபாவுக்கு கூலி வேலை செய்தான். மற்ற பிள்ளைகளில் மூன்று பேர் ஆளுக்கொரு ஊருக்கு மாடு மேய்க்கப் போனார்கள். 6 பவுன் நகை இருந்தது அதையும் அடகு வைத்தோம் பிறகு வெண்கலப் பாத்திரங்கள். வறுமையின் காரணத்தால் மாமனாரும் 5 வயது மகனும் இறந்தனர். தண்ணீர் இறைக்கும் பத்தல் கமரம் இரண்டு இருந்தன அதை 50- ரூபாவுக்கு விற்று விட்டு எனது கணவர் அந்த பணத்தில் அரிசி கடத்தல் வேலைக்குப் போனார் கணவரையும் இரண்டு குழந்தைகளையும் ஊரில் விட்டு விட்டு ஏற்காடு போய் மெய்யப்பா எஸ்டேட்டில் வேலை செய்தோம். கூலி ரூபா 2.40. 5 மாதங்கள் வரை சோறு என்பதையே பார்க்கவில்லை. அதன் பிறகு வேலை முடிந்தது. ஊருக்குப் போய் கணவர், குழந்தைகள் எல்லோருமாய் வால்பாறை வாட்டர் பால் எஸ்டேட்டுக்கு வந்தோம். கையில் அரைக்காசு கூட இல்லை அங்குள்ள மக்கள் எங்கள் நிலையை விசாரித்து மிகவும் வருந்தினார்கள். 4 கட்சித் தலைவர்களும், தொண்டர்களும் சேர்ந்து எங்களுக்காக பிச்சை எடுத்தது போல கடைகளுக்கு சென்று சில உணவுப் பொருட்களை வாங்கிக் கொடுத்து ஓர் இடத்தில் தங்க வைத்தார்கள். மறு நாள் காண்டிராக்ட் கட்டட வேலைக்கு பேசி அனுப்பினார்கள். அன்று எஸ்டேட் மக்களுக்கு ரேசன் அரிசி போட்டதனால் வீடு வீடாக தொண்டர்கள் சென்று அரிசி வாங்கிக் கொடுத்து உதவினார்கள்.

6 வது மாதம் என்ன கணவரின் இடது கைப் பெருவிரலில் கல் விழுந்து ஆபரேசன் நடந்தது ரூப 60 - இன்சூரன்ஸ் பணம் வந்ததும் முதலாளி

# கதை

வீட்டைக் காலி பண்ணி போகச் சொன்னார். தலைவர்கள் நீங்கள் போக வேண்டாம் முதலாளியிடம் பேசி உங்களுக்கு இங்கே திரும்பவும் வேலை வாங்கித் தருகிறோம். என்றார்கள். அதன்படி அங்கே இருந்துக் கொண்டு, அதைச் சேர்ந்த 4 டிவிஷன்களில் கட்டட வேலைக்கு சென்றோம். அதை அறிந்து கொண்ட முதலாளி எல்லா காண்டிராக்ட் காரர்களிடமும் நீ வேலை கொடுத்தால் உனக்கு காண்டிராக்ட் கொடுக்கமாட்டேன்'' என்றதால் எல்லா காண்ட்ராக்ட் காரர்களும் பயந்து வேலை கொடுக்க மறுத்து விட்டனர். தலைவரிடம் கேட்ட போது, ''நாங்கள் என்ன செய்ய முடியும்? பொதுவா சிலோன் ஆட்களை வேலைக்கு நிறுத்த வேண்டாம் என்கிறார். நீங்கள் வேறு இடம் பாருங்கள் என்று கூறிவிட்டனர்.

அதன் பிறகு ஒரு தனியார் எஸ்டேட்டில் காப்பி வேலை ஒரு வருடம் செய்தோம். காட்டு முடிந்து நாத்து நட்டு முடிந்ததும் வேலை முடிந்து விட்டது என்று எங்களை போகச் சொன்னார்கள். வால்பாறை டவுனுக்குப் போய் வாடகை வீட்டில் இருந்த படி வால்பாறை தாசில்தாருக்கு மனுப் போட்டோம். அவர் சிலோன் அதிகளுக்கு ஒதுக்கப்பட்ட இடத்தில் குடிசை போட்டுக் கொள்ளச் சொன்னார். குடிசைப் போட்டு அங்கு வசித்தோம். 6 மாதத்தில் எனது கணவர் இறந்து போனார்.

நாங்கள் வந்த வருடத்திலேயே கலெக்டருக்கு மனுக் கொடுத்திருந்தோம். ஆனால் 'ஒரு வருடத்தில் மனு கொடுக்கவில்லை? என்று காரணம் காட்டி எங்கள் பாஸ்போர்ட், குடும்பக்கார்ட்களை வாங்க மறுத்து மனுக்களை நிராகரித்து விட்டார்கள் மீண்டும் தாசில்தாரிடம் போய் வியாபாரக் கடன் கேட்டதற்கு. 'நான் என்ன செய்ய? கண்டிக்கு எழுதுங்கள்'' என்றார்

அப்போது நான் ஒரு சங்கத்தில் சேவகியாக இருந்தும், அந்த சங்கமே உரிய கடமையை செய்ய முன்வரவில்லை அச்சங்கத்தினர் எனக்கு எதிராக ஒரு நபரைத் தூண்டிவிட்டு என் வீட்டுக்கு முன் குடிசை போட வைத்தனர் தடுக்கப் போன என் மகளை தாக்கினர். தாலூகா பீஸில் சொல்லியும் போலீஸில் சொல்லியும் விசாரணை செய்ததோடு முடிவு ஒன்றும் கிடைக்கவில்லை. கள், சாராயக் கடைகள் இருக்கின்றன இந்த இரண்டுக்கும் இடையில் எனது வீடு இருக்கிறது 3 பெண்கள் இருக்கிறார்கள் எனது வீட்டிலிருந்து 100 அடித்தூரத்தில் ஒரு பேக்கரி உள்ளது ரோட்டில் சில பெண் வரும் போது பேக்கரியில் உள்ள பையன்கள் கேலி செய்ததை நான் கண்டித்தேன் அதன் பிறகு எனது பிள்ளைகளை கேலி செய்ய ஆரம்பித்தனர் போலீஸில் ரிப்போர்ட் செய்தேன். பேக்கரிக்காரர்கள் நள்ளிரவில் வீட்டைத்தட்டிக் கலாட்டா செய்தனர் போலீஸ் வந்து ஒருவனை மட்டும் கூட்டிச் சென்றது மாலையில் அவனிடம் 50 ரூபாவை வாங்கிக் கொண்டு விட்டு விட்டார்கள்

இந்த சரித்திரம் எங்கே போய் முடியும் என்று தெரிவில்லை.

எனக்கு பிரசவ மருத்துவச்சி தொழில், தேயிலை, காப்பி தோட்டத் தொழில் முதலாக பல தொழில் தெரிந்தும் வறுமையின் காரணத்தாலும், வாய்ப்பின்மையிலும் பலன் பெற முடியவில்லை.

என்னுடைய ஒரு பெண் மணமாகி கணவன் சரியில்லை என்பதால் விவகாரத்து செய்யப்பட்டுள்ளாள்; இன்னொருத்தி திருமணம் முடித்து தேயிலைத் தோட்டத்தில்வேலை செய்கிறாள்; ஒரு பெண் தையல் படித்து விட்டு தினக்கூலியாய் வேலைக்குப் போகிறாள்; இன்னொருத்தி கால் நொண்டி ஒரு மகன் 6ம் வகுப்பில் பெயில். புத்தகம் வாங்கிக் கொடுக்க முடியாமல் படிப்பை நிறுத்தி விட்டான். இப்படி ஒவ்வொன்றும்

இவர்களுக்கு என்னால் என்ன சொல்ல முடியும்—? இதுதான் என் முன் கேள்வியாக உள்ளது

(இலங்கையிலிருந்து இந்தியாவுக்கு குடிப்பெயர்ந்த மக்கள் மத்தியில் 1983 செய்யப் ஆய்வு – எங்கெங்கும் அந்நியமாக்கப்பட்டவர்கள்' நூலிலிருந்து)


அனைத்துக்கும்

தொடர்பு கொள்ள

கீழ்காணும்

முகவரிக்கு எழுதுக:

**மக்கள் மறுவாழ்வு**

1, தெற்கு கங்கையம்மன்
கோயில் 2வது தெரு
சென்னை-600094



## எங்கெங்கும் அந்நியமாக்கப்பட்டவர்கள்

### ஓர் ஆய்வு நூல்

இன்றைய காலகட்டத்தில் இலங்கைத் தமிழர்கள் பற்றி பலதரப்பினராலும் பேசப்பட்டு வருகின்றது. ஆனால் இலங்கைத் தமிழர்களில் ஒரு பிரிவினரும், இலங்கைத் தேசிய இனச்சிக்கலில் ஒரு கூறுமான இலங்கை மலைவாழ் (இந்திய வம்சச் வழியினர்) தமிழ் மக்களின் உண்மை நிலை பற்றியும், அவர்கள் இந்தியாவுக்கு குடிபெயர்ந்த பின் அடைந்துள்ள வாழ்க்கை நிலவரங்கள் பற்றியும் இதுவரை முழுமையான ஆய்வு நூல் எதுவும் வெளிவரவில்லை. 'சிராக்'' நிறுவனம் 'எங்கெங்கும் அந்நியமாக்கப்பட்டவர்கள்'' என்ற தலைப்பில் மிகச் சிறந்த ஆய்வு நூல் ஒன்றை வெளியிட்டுள்ளது இந்த நூல் படித்து, பாதுகாத்து வைக்கும் நூல் வரிசையில் இடம் பெறக் கூடியது.

இதன் விலை ரூ. 20-மட்டுமே. பிரதி வேண்டுவோர் கீழ்க்கண்ட முகவரிக்கு மணியார்டர் மூலம்பணம் அனுப்ப வேண்டுகிறோம். எங்களது தபால் செலவில் பிரதிகள் அனுப்பி வைக்கிறோம்.

கிடைக்குமிடம்:

**எஸ். பன்னீர் செல்வம்**

76 B. N. G. O காலனி
திண்டுக்கல் – 624009

# இலங்கைத் தமிழர் பற்றிய இரு நூல்கள்

## இருபதாம் நூற்றாண்டின் நவீன அடிமைத்தனம்

ஆசிரியர்
**மோகன் ராஜ்**
வெளியீடு:
**ஈழ ஆய்வு நிறுவனம்**
**விலை: ரூபா 10.00**

கிடைக்குமிடம்
ஈழம் குடிப் பெயர்ந்தோர் அமைப்புச் சங்கம்
0, கங்காராம் தோட்டம்,
சிவன் கோயில் தெரு,
சென்னை-6000 4

இலங்கையின் மலைநாட்டில் வாழும் தேயிலை, றப்பர் தோட்ட தமிழ் தொழிலாளர் சமுகத்தின் வரலாற்று நூல் இது.

18 ஆண்டுகளுக்கு முன், இந்தியாவிலிருந்து இலங்கைக்கு இவர்கள் சென்ற கதையை விவரிக்கிறது அங்கே காடுகளை அழித்து காப்பி, தேயிலை றப்பர் தோட்டங்களை உருவாக்குவதில் அவர்கள் பங்கு, அவர்கள் பட்ட துன்பங்கள்-இழப்பு,தோட்டங்களில் தோட்டத்துரைமார்கள் கண்காணிகள் மத்தியில் கொத்தடிமைகளாக வாழ்ந்த வாழ்க்கை, இவர்களது குடியுரிமை பறிக்கப்பட்டது, நாடு கடத்தப்படுவது, இவர்கள் மத்தியில் அரசியல் கட்சிகள் தொழிற் சங்கங்கள் செயல் பட்ட விதம் குறித்து விரிவாக எழுதப்பட்டுள்ளது.

இந்த வரலாற்றில் இடம் பெற்றுள்ள சில தகவல் கருத்துகள் சரியானதா என்ற ஐயப்பாட்டை கிளப்பினலும், மலையகத் தமிழ் மக்கள் குறித்து வெளிவந்திருக்கும் இந்நூல் ஒரு முதல் முயற்சியாகும் என்று பாராட்ட வேண்டும்.

## இலங்கையின் தேசீய இனச்சிக்கல் ஒரு பார்வை

ஆசிரியர்
**'லோகன்'**
வெளியீடு:
**ஆய்வகம்**
12, வெங்கடேசபவனம்
தஞ்சை
விலை ரூபா 600

இலங்கையில் நடக்கும் இனப்படுகொலை இன்றல்ல; நேற்றல்ல பலஆண்டுகளாய் நடை பெற்று வருகின்ற தொடர் நிகழ்ச்சி, இது தமிழ் மக்களின் அன்றாட வாழ்விலும், அரசியல் கண்ணோட்டங்களிலும் நிறைய பாதிப்புக்களை ஏற்படுத்தியுள்ளது.

இந்த சூழலில் இலங்கையின் தேசிய இனச்சிக்கலைப் புரிந்து கொள்ளும் நோக்கோடு இலங்கையின் சமூக உருவாக்கம் அரசு உருவாக்கம் தேசீய இனச்சிக்கலைத் தீர்ப்பதற்காகநிலவும் அணுகு முறைகள் ஆகியவைபற்றியது இந்த நூல்.

## வெளிச்சம் தெரிகிறது

ஆசிரியர்
**ஐவஹர் ஆறுமுகம்**
**விலை: ரூபா 1.00**
4 ஈ-1 வில்லியம்ஸ் ரோடு.
திருச்சி 620001

# குமரிமுனை ஓரம் குமுறுகின்ற நேரம்!

## "கவிஞர் வேணுகோபாலன்"

ஈழக் குமுறல் செவி மடுத்த எங்கள்
இன்பக் குமரி கொதித் தெழுந்து
வாழப் பிறந்த தமிழருக்கு அங்கு
வாட்ட மென்னவென்று கூவுகின்றுன்.

கள்ளப் படகில் நுழைந்து இலங்கையில்
காலடி வைத்த மனித ரல்லர்
உள்ளவரையில் உரிமையுடன் அதில்
உண்டு களிக்கப் பிறந்தவர்கள்

தேயிலை கிள்ளும் தமிழ்க்கரங்கள் ஈழத்
தேசத்தைக்காக்கும் தமிழ்ப் புயங்கள்
தாயெனத் தாங்கும் உணர்ச்சிகளை விழத்
தட்டிவிட்டாய் பழி கொட்டிவிட்டாய்

பச்சைப் பசுந்தளிர் காணும் இலங்கையாய்ப்
பாரில் உயர்த்திய நல்லவரை
பிச்சைக் கலைந்திடும் கூட்டமென எண்ணிப்
பேசிவிட்டாய் கரி பூசிவிட்டாய்

வள்ளுவன் கண்ட குறள்வடிவில் உயர்
வானெடு நிற்கும் இளந் தமிழின்
உள்ளும் புறமும் மணங் கமழும் அந்த
உண்மை அறியத் தவறி விட்டாய்.

தீரும் வழியின் திசைதவறிக் கொடுந்
தீய வழியினிற் சென்று விட்டாய்
கோர வெறியை அவிழ்த்து விட்டு அன்பைக்
கொன்றுவிட்டாய் மென்று தின்றுவிட்டாய்

தன்னில் உயிரினும் மேலெனவே கற்பைத்
தாயெனப் போற்றும் தமிழ் இனத்துக்
கன்னி மகள் பெற்ற கற்பை அழித்ததில்
காணுவாய் மற்றெரு வேதனையை.

எந்த மொழியையும் சொந்த மொழிகளாய்
ஏற்றவர் நெஞ்சைப் பிளந்து விட்டாய்
கந்தமிகும் எங்கள் செந்தமிழில் கொண்ட
காதலில் நஞ்சைக் கலந்து விட்டாய்

பெண்ணின் அரசு உயர்ந்ததென மக்கள்
பேசி மகிழ்ந்த பெருமை யன்றே
கண்ணைப் பிடுங்கும் இதயமெனச் செய்து
காட்டி விட்டாய் சட்டம் தீட்டிவிட்டாய்.

பொங்கிப் பொங்கியெழும் எங்கள் தமிழரைப்
பூட்டி வைப்பதால் நாட்டுவெறி
மங்கி மடிந்திடும் என்ற மயக்கத்தை
மாற்றிவிடு வெளி யேற்றிவிடு.

சிங்களத் தாயும் வளமடைய அன்று
செந்தமிழ் அன்னை மகிழ்ந்தனளே
செந்தமிழ் அன்னை மகிழ்ந்திருக்க இன்று
சிங்களத் தாயும் பொறுத்தனளோ?

போடும் விலங்கும் புதுத்தடையும் உடல்
பொத்துத் துளைத்திடும் குண்டுகளும்
வாடும் உடலில் உயிரிருக்கும் வரை
வாழும் உரிமைக்கு சாட்சிதரும்

[இந்தக்கவிதை இலங்கையில் திருமதி பண்டாரநாயக்கா அரசு இருந்த போது 1961—ம் ஆண்டு ஏற்பட்ட இனக் கலவரத்தை முன்னிட்டு பர்மாவில் வெளியான தொண்டன் தமிழ் நாளேட்டில் 7-5-961—ல் கவிஞர் வேணுகோபாலன் அவர்களால் எழுதி வெளியிடப்பட்டது ]

# 14

ஒவ்வொரு அலையாக வந்து வந்து கரையை மோதிச் செல்கின்றன. அந்த அலைக ளைப்போல அவர்களைப் பற்றிய நினைவுகள் மனதில் வந்து வந்து போகின்றன.

அந்த நினைவுகளில் என்னோடு சபினு வந்துகொண்டிருந்ததைக் கூட மறந்து விட்டேன்.

"என்ன எப்போ பார்த்தாலும் யோசிச்சுக்கிட்டே இருக்குறீங்களா?" என்று அவள் என்னை உசுப்பியதும் தான் சுய நினைவுக்கு வந்தேன்.

"இல்ல இலங்கையிலிருந்து வந்துகிட்டு இருக்கிற நம்ம ஆட்கள பத்திதான் யோசிச்சுக்கிட்டு வர்றன்" என்றேன்.

அவளுக்கு அதைப் பற்றி அக்கறை இருப்பதாக தெரிய வில்லை.

"நீங்க இப்ப ரொம்ப மாறிப் போயிருக்குறீங்க. முன்ன மாதிரி பேச்செல்லாம் காணல்ல; ரொம்ப யோசித்து யோசித்து பேசறீங்க" என்று என்னைப்பற்றி பேச ஆரம்பித்தாள்

"முன்ன மாதிரியா? முன்ன எந்த பொறுப்பும் இல்லை என்னப்பா இருந்தாரு. இப்ப அப்பிடி இல்லையே எங்க குடும்பத்தையே நான் தான் கவனிக்கனும் அங்க அதுக்குக் கூட இதில கஷ்டம தெரிஞ்சிருக்காது இங்க அப்பிடியா? இந்த ரெண்டு ரெண்டரை வருஷத்த நெனைச்சுக் கூட பார்க்க முடியல்ல"

நான் சொன்னதும் அவள் கேட்டாள்—

"அதான் இப்பிடி இருக்கு நீங்க போல இருக்கு"

நான் ஒன்றும் சொல்ல வில்லை. சிரித்துக் கொண்டேன்

"நல்லா கருத்துப் போயிட்டீங்க" என்று என்னை அனுதாபத்தோடு பார்த்தாள்.

எனக்கு புல்லரித்தது.

'இவளுக்கு இந்த அளவுக்கு என் மீது அக்கறையா?'

எனக்கு பட்ட துன்பங்கள் எல்லாம் பறந்து போனது மாதிரி இருந்தது; வாழ்க்கையில் அத்தனை பேறுகளை யும் பெற்று விட்ட நிறைவு—

நான் எதுவும் பேச வில்லை அவளைப்பார்த்தேன்.

அந்த மலைநாட்டின் வனப்போகுளிர்ச்சியோ அவள் நன்றாகத்தான் இருந்தாள். முன்னை விட நன்றாகத்தான் இருந்தாள். ஆனால் கொஞ்சம் மெலிந்துப் போயிருந்த மாதிரி இருந்தது

"நீ கூட மெலிஞ்சு தான் போயிருக்கிற?" என்று அவளைக் கேட்டேன்

"ஏன் எனக்கு மட்டும் கவலை இல்லையா?" என்று




என்னை குறுகுறுப்போடு பார்த்தார்கள்

"உனக்கு என்ன கவலை? அப்பா இருக்கிறாங்க, அம்மா இருக்குறாங்க" என்று நான் அவள் வாயைக் கிளறினேன்

அவளும் விடல்லை-

"அம்மா அப்பா இருந்தா? அவங்க இருந்தா கவலையே இருக்காதா?"

"அப்பிடி என்ன கவலை உனக்கு?" நான் அவளை விடவில்லை

'அவங்க அவங்களுக்கு எத்தனையோ கவலை' என்றாள்.

எங்கள் பேச்சுக்கள் எங்கெங்கோ சென்று வந்தன. நாங்கள் வந்ததன் பின்னால் தோட்டத்தில் நடந்த கதைகளையெல்லாம் சொன்னாள். நான் இங்கே அனுபவித்த அனுபவங்களையெல்லாம் தெரிவித்தேன்—

"நீங்க எங்க வராமலே இருந்திடுவீங்களோனு நினைச்சேன்." என்று அவள் அடைந்த சந்தேகத்தை சொன்னாள்.

இந்த கவலைக் கூட அவளுக்கு இருந்திருக்கிறது. நான் இந்தியாவுக்கு வந்து விட்ட கவலை கூட இருந்திருக்கும்? அதனால் கூட உடல் மெலிந்து போயிருப்பாள்—இப்படிக் கூட நான் நினைத்துக்கொண்டேன்.

'நான் அப்பிடி வராம இருந்துடுவேன்னு நினைச்சியோ. நான் கூட அப்பிடித் தான் நினைச்சேன். நான் இந்தியாவுக்கு வந்த பிறகு கடிதம் கூட எழுதாம மறந்திடுவி யோனு... இங்க நீங்க வர்ற நேரம் கூட எங்க தெரிவிக்கப் போறீங்கன்னு சந்தேகப் பட்டேன்" என்றேன்.

"நீங்க சந்தேகப்படுவீங்கலே. மறக்கிற மாதிரியா நாம பழகியிருக்கிறோம் நம்ம பழக்கம் நேத்து மூந்தா நாள் ஆரம்பிச்சதா?' என்று சொல்லி விட்டு சொன்னாள்—

"இருந்தாலும் நீங்க மறந்துட்டீங்க. கடிதம் கூட ஒழுங்கா எழுதலயே. ஆடிக்கொன்னு அம்மாசிக்கு ஒன்னுன்னு போட்டீங்க. ஒங்க மேலே ஆத்திரம் ஆத்திரமா வந்துச்சு".

"என்ன பண்ணுறது? இங்க வந்ததும் அப்பிடியாயிருச்சு ஒரே பிரச்சன நினைச்ச நேரத்தில முடியல்ல. அதுக்காக, யாரையும் மறந்துடல்ல."

என்று அவளுக்கு சமாதானம் கூற வேண்டியதாயிற்று.

"நாம இனிமே சந்திப்போமானு கூட எனக்கு சந்தேகம் தான்" என்றாள்.

'இப்பதான் சந்திச்சிட்டோமே." என்று நான் சிரித்தேன்.

இப்படி அன்றைக்கு நாங்கள் பேசிக் கொண்டிருந்ததில் நேரம் போனதே தெரியவில்லை பொழுதே சாய்ந்து விட்டது.

அவளுடைய பெரிய தம்பி கடல் கரைக்கே தேடி வந்து எங்களை கூப்பிடத் தொடங்கியதும் தான் பொழுது போனதே தெரிந்தது.

சபினு கடிதத்தில் எழுதியிருந்தது போலவே, அவளுடைய அப்பாவும் கடிதம் எழுதியிருந்தார்.

தாங்கள் இன்ன தேதியில் புறப்படுவதாகவும், மண்டபம் கேம்பிற்கு வரும்படியும் வந்தால் உதவியாக இருக்குமென்றும், தாங்கள் எங்கு போய் குடியேறுவது என்ன செய்வது என்று தீர்மானிக்க முடியும் என்று எழுதியிருந்தார்.

மண்டபம் கேம்பிற்கு போய் அவர்களை சந்தித்தேன் என் யோசனைப்படி அவர் கேட்க தயாராக இருந்தார்கள்.

அரசின் மறு வாழ்வு உதவியில் கிடைக்கும் கடனுதவிக்காக காத்திருக்க வேண்டி இருந்தது. இரண்டு வாரங்கள் கழிந்து அந்த உதவித் தொகை கிடைத்தது.

நீலகிரிக்கே அவர்களையும் கூட்டிக் கொண்டு வந்தேன் நாங்கள் குடியேறிய கூடலூருக்கு அருகிலேயே அவர்களையும் குடியமர்த்தினேன் தற்காலிகமாக வாடகைக்கு ஒருவீடு ஏற்பாடு செய்து வைத்தேன்—மற்ற வேலைகளையும் செய்ய ஏற்பாடுகள் செய்துக் கொண்டிருந்தேன்.

மண்டப முகாமில் அந்த இரண்டு வாரங்கள்வரை அவர்களோடு தங்கி இருந்தேன்—அந்த நாட்கள் இனி என்றைக்

கேனும் வருமா என்பது போல கழிந்தன—

ஒவ்வொரு நாளும் மாலையும சபீனுவோடு கடற்கரைக்குப் போனேன். எங்களுக்கு நேரம் போவதே தெரியாது கரைந்தது.

அப்போது நானும் அவளும் பேசினோமே பழகினோமே அது கடலுக்கு அப்பாலிருந்ததை விட இக்கரையில் மிகமிக அர்த்தமுள்ளதாக—

அது இப்போது அர்த்தம் இல்லாததாக போய் விட்டதா? அந்த இரண்டரை வருடங்களாக இல்லாத மாற்றம்— அந்த இரண்டு வாரங்களில் ஏற்பட்ட அழுத்தம், ஆர்வம், பிணைப்பு எல்லாமே இப்போது போய்விட்டதா?

இங்கே வந்து ஒருமாதம் கூட முடியவில்லை அதற்குள்ளே—

என் சொந்த ஊரிலிருந்து என் பூர்வமான ஊரிலிருந்து எதையெல்லாம் வேம்பாக வெறுத்து வந்தேனோ அந்த சாதி, சமூகத் தளைகளிலிருந்து விடுபட்டு ஓடி வந்தேனோ அதே பாதிப்பு! இவளுக்குமா?

அதற்காக என்னிடம் கூடவா பேசத் தயங்க வேண்டும். அவளுடைய அம்மா அப்பா ஏதும் சொல்லி இருப்பாங்களோ' என்று மனம் குறு குறுத்தது.

"உங்க அம்மா அப்பா ஏதும் சொன்னுங்க?" என்று கேட்டேன்.

"அவங்க ஒன்னும் சொல்லலயே அப்பா தான அது இது என்று சொக்ருர் அங்க மாதிரி இங்க இருக்கப்படாதுங்கிருர்." என்று சொன்னுள்.

அவர் சொல்லி இருப்பார். அவருக்கு இதெல்லாம பிடித்தாலும பிடிக்கும். மதம், மார்க்கப்பற்று அதிகம். அங்கே அவர் மலையேறி உழைக்கும் தொழிலாளியாக இருந்தும இந்த மார்க்கநெறிகளை கடைப்பிடிப்பதில் தவறுவதில்லை. வெள்ளிக்கிழமைப் பள்ளிக்குச் செல்ல தவறுவதில்லை நோன்பு முதலான மதச் சடங்குகளை தவருது கடைப் பிடிப்பதிலும் தவறுவதில்லை.

இந்த ஊருக்கு வந்து இதையெல்லாம் கடைப்பிடிப்பது என்பது அவருக்கு சிரமமாகக் கூட இருக்காது. இத்தனைக் காலமும் இதையெல்லாம் கடைப்பிடிக்காதது தான் பாவம் என்பார்.

இல்லாவிட்டால் 'இனத்தாரின்' கருத்து வேறுபாடுக்கு ஆளாகி விடக் கூடாதேஎன்று கூட எண்ணியிருப்பார்— அவர்களுக்கு கட்டுப்பட்டு, அந்த சமூகத்தில் தானும் ஒருவராக ஒத்து போய் விட வேண்டும் என்றும் நினைத்திருப்பார்.

அவருக்கு நான்கு பெண்களும், மூன்று பையன்களும் இருக்கிருர்கள். அவர்களை எல்லாம் நல்லபடி கரை சேர்க்க வேண்டும், தன் இனத்திலேயே மாப்பிள்ளை பெண் பார்க்க வேண்டும்— ஐந்து வேளையும் தவருது தொழ வேண்டும். வெள்ளி தோறும் பள்ளிக்குப் போக வேண்டும். நோன்பு பிடிக்க வேண்டும், கந்தூரி எடுக்க வேண்டுமென்றும் மார்க்க நெறிகளைக் கடைப் பிடிப்பதில் கண்ணும் கருத்துமாக இருக்கிறவர், இவற்றிற்கு மாருக ஒன்றை செய்யத் துணிவாரா?

அங்கே குடி வந்த போது அவர் ரொம்பவும் மகிழ்ந்து போனது இன்னும் ஞாபகம் வருகிறது.

"பரவா இல்லை தம்பி நல்ல இடத்தில் தான் வந்து குடியேறி இருக்கிரோம். எங்க ஆட்களும் நிறைய இருக்கிருங்க. பள்ளிவாசலுக்கும் ரொம்ப தூரம் போக வேண்டியதில்லை. பக்கத்திலேயே இருக்குது அங்கதான் எப்படி எப்படியோ இருந்தோம்— இங்க யாவது நல்லபடியா வாழ்வோம்" என்று சொன்னுர்.

அங்கே— தோட்டத்தில் அறுநூறு எழுநூறு குடும்பங்களில இரண்டொரு குடும்பங் மட்டும் தான் இவர்கள் இப்படி ஆங்காங்கே சில தோட்டங்களில் இவர்கள் தப்பித்தவறி வேலை செய்வார்கள். அது அவருக்கு தனிமையாக—'நல்லது கெட்டது' வரும் போது 'நாலு சாதி ஜனங்களை' அழைக்க முடியாத அதிருப்தியக கூட இருந்திருக்குமோ?

'அங்கே எப்படியோ வாழ்ந்தோம்' என்று அந்த ஊருக்கு தகுந்த மாதிரி வாழ்ந்ததை நினைவுபடுத்தினுர். 'இங்கே நல்லபடியாக வாழ வேண்டும்' என்று ஆசைப்படுகிற மாதிரி அந்த வாழ்க்கை முறைகளை எல்லாம் துறந்து விட்டு இந்த ஊருககும், தங்கள் சமூகத்திற்கும்— மதத்திற்கும் தகுந்த மாதிரி வாழ வேண்டும் என்ற சங்கல்பமெடுத்துக் கொண்டாரோ?

அதனுல்தான் தன் பிள்ளைகளுக்குப் போதிக்கிருரோ? பழைய பழக்கங்கள், வழக்கங்களையெல்லாம் விட்டு, இது வரை கடைபிடிக்காத தங்கள் ஆச்சாரங்களையும் பழக்கவழக்கங்களையும் கடைபிடிக்க வேண்டும் என்று சொல்லி வருகிருரோ?

அதனுல் தான் இவ்வளவு மாற்றங்களா? இத்தனை சீக்கிரமாக மாறிக் கொண்டுவருகிருர்களோ?

எனக்கு ஒன்றும் பேசத் தோன்றவில்லை.

அவள் இன்னும் உள் வாசலில் கதவைப் பிடித்தவாறு நின்று கொண்டிருந்தாள். நான் முன் அறையில் நின்றவாறே பேசிக் கொண்டிருந்தேன்.

எனக்கு திகைப்பாக இருந்தது. ஏன் இந்த வீடு கூட இப்படி இருக்கிறது—

தரையில் செம்மண் புழுதி படர்ந்திருந்தது. இரண்டு வாரத்துக்கு முன்னுலே தான் அந்த வீட்டுக்கு வெள்ளைக்கூட அடித்தார்கள்: குண்டும் குழியுமாய் உடைந்துக் கிடந்த அந்த முன் அறை தரைக்கு ஈர மண் தடவி சாணம் போட்டு பூசியிருந்தார்கள்—தரையில் நீளமாக விரல்களால் அழகாக கோடுபோட்ட மாதிரி வரிவரியாய் இழுத்து விட்டு மெழுகி இருந்தனர்.

அதெல்லாம் காணவே இல்லை அதற்கு பின்னுல் மெழுகவே இல்லையோ?

"இதென்ன தரையெல்லாம் ஒரே செம்மண் புழுதியாக இருக்குது. வெள்ளை அடிச்ச நேரம் மெழுகினதோ, சாணம் கிடைக்கலையா?" என்றேன்

அவள் மெல்ல சிரித்தாள். சொல்ல தயங்குகிற மாதிரி இருந்தது. பிறகு சொன்னுள்.

"சாணம் போட்டு மெழுகக் கூடாதாம். இங்க யாரும் சாணம் போட்டு மெழுகிறதில்லை. நாங்க சாணம்போட்டு மெழுகியிருந்ததுக்கு ஆச்சரியப்பட்டாங்க இனிமே அப்பிடி மெழுகக் கூடாதுனு சொல்லுருங்க அதான் வெறும் மண்ணைப் போட்டு மெழுகியிருக்கிரேம்."

இங்கே, இவர்கள் மத்தியில் இப்படியொரு பழக்கம், நாட்டுக்கு நாடு ஊருக்கு ஊர் இனத்துக்கு இனம், சாதிக்கு சாதி மதத்துக்கு மதம் என்று எத்தனை வேறுபாடான பழக்கங்கள் வழக்கங்கள் கட்டுப்பாடுகள்— இவர்களும் தான் எத்துணை சீக்கிரமாக இவற்றின் பாதிப்புக்குள்ளாகி மாறிக் கொண்டிருக்கிறார்கள்.

'இன்னும் என்னென்ன மாற்றம், எல்லாம் ஏற்பட்டிருக்கிறதோ'

எனக்கு நினைக்க கசப்பாக இருந்தது.

இன்னும் என்னென்ன சொல்ருங்க அங்கு இன்னும் என்னென்ன மாற்றங்கள் நடந்திருக்கிறதென்று அறிய முயன்றேன்

"என்னென்னவோ சொல்ருங்க என்னென்னவோ கேக்குருங்க" என்று சொன்னவள், "உங்களக் கூட கேட்டாங்க" என்ருள்.

"என்னையா? என்னை என்ன கேட்கிருங்க" என்று ஆவல் மேலிட கேட்டேன். நெஞ்சு பட படத்தது.

"நீங்க யாரு எவருனு— எங்க இனமா மதமானு கேட்கிருங்க. அது மட்டுமில்ல நீங்க இங்க வீட்டுக்கு வர்றதபோறத பத்திக் கூட ஒரு மாதிரி பார்க்கிருங்க இன்னொரு சாதிக்காரங்களோட இவ்வளவு நெருங்கி, பழகுறீங்க எப்பிடி வீட்டுக்கு வரலாம் போகலாமனு கூட சொல்ருங்க"

அவள் சொல்ல சொல்ல எனக்கு அதிர்ச்சியாக இருந்

(14-ம் பக்கம் பார்க்க)

# நாட்டுப்பாடல்கள் விரவிய இலங்கை மலையகத் தமிழர் கதை....

டி.எஸ்.ராஜ்

"தொண்டி தூத்துக்குடி —வந்து
பட்டியில் மாடு அடைப்பது போல
அவர் பட்டபாடு இரவும் முழுவதும்
காலை விடியவே கரை வந்து சேரவே
ராகமத் துறையில் வந்து இறங்கி
பார்த்தார்கள்— நெஞ்சை
தட்டியும் கொட்டியும்.
படிச்ச வித்தையெல்லாம் காட்டி
ஏத்தினார் ஆளுகள கோச்சி யில போவதற்கு
ஏழுநாள் காவல் முடிந்த பின்னே"

தொழிலாளர்கள் இலங்கைக்கு வரதலைப்பட்ட ஆரம்ப காலத்தில் நோய் தொடியால் அவதியுற்றார்கள். எங்கனும் வைத்திய வசதியில்லாத காரணத்தால் 1899ம் ஆண்டில் 'குவாரண்ட்கேம்ப்' தலைமன்னாரில் ஆரம்பிக்கப்புட்டது. அதற்கு முன்னால் கரையை அடைந்தது மேமலையகப் பிரதேசத்தை நோக்கி தமது பயணத்தை ஆரம்பித்தார்கள். இந்த கேம்ப் வருகைக்கு பின்னால் நோய்தொடி தடுப்பு காரணமாக ஏழு நாட்கள் அங்கேயே தடுத்து வைக்கப்பட்ட பின்னரே செல்ல அனுமதிக்கப்பட்டார்கள்

.........................................................

நாங்கள் வந்த கப்பலிலே
ஜனக் கூட்டம்"

கூட்டம் கூட்டமாக கங்காணிகள், தமிழ்நாட்டிலிருந்து மலை நாட்டை நோக்கி தொழிலாளர்களை கப்பல்களில் அழைத்து வந்தார்கள்;

தொண்டி, தூத்துக்குடி, தனுஸ்கோடி வாயிலாக வந்த தமிழ் தொழிலாளர்கள் தட்டப்பாறை அரிப்பு ஆகிய கரைகளில் இறங்கி ராகம அனுராதபுரம் வழியாக குருநாகலை, பன்னாமலை (மாத்தளை) ஊடாக மலைநாட்டை அடைத்தார்கள்.

கப்பல் போக்குவரத்து ஆரம்பிப்பதற்கு சில வருடங்களுக்கு முன்னால் தான் புகை வண்டிப் போக்குவரத்து ஆரம்பமானது. முதலில் 1867ல் கொழும்பு-கண்டி தொடரும், 1890ல் கண்டி-நானு ஓயா தொடரும் 1984ல் மன்னாருக்கு, 1924ல் பதுளைக்கும் ஆரம்பிக்கப்பட்டன. அதற்கு முன்னால் தட்டப்பாரை அரிப்பு மன்னார் கரைகளிலிருந்து மலை நாட்டிற்கு கால்நடையாகத் தான் நடந்து வந்தார்கள்.

இலங்கையின் – நடு மையத்திலே மரகதக் கம்பளமாய்-பல வளம் கொடுக்கும் மலை நாடு வரை தொழிலாளர்களை பெரியக் கங்காணிகளே வழி நடத்தினார்கள் வடக்கே தமிழ் நாட்டிலே ஆசை வார்த்தைகளை அன்பொழுகப் பேசி, கூலிக்கு ஆட்களை சேர்த்து- ஆளை கட்டும் வரை-கங்காணிகளுக்கு போதும் போதும் என்றாகி விடும். எப்படி ஆயிரமாயிரம் அன்பு வார்த்தைகளை அள்ளித் தெளித்து அழைத்து வந்து கப்பலேற்றி இலங்கைக் கரையில் சேர்த்த பின்னால் தான் அவர்களுடைய உள்ளத்தில் மகிழ்ச்சிப் பொங்கும்.

"இனி மோசமில்லையென்று
கங்காணியார் பாடு
முன்னவிட்டோட்டினார்
தோட்டம் வரை"

அப்படி பொங்கி வழிந்த மகிழ்ச்சியைக் கொஞ்சம் அதிகாரத் தோரணையோடு மாற்றி கொண்டார்கள் அவர்களை முன்னே விட்டு ஏவிச் சென்றார்கள்.

சோற்றுக் கடையிலே
சாதங்கள் சாப்பிட
துட்டு கொடுத்தாரு
தந்திரமாய்
அன்னாசி காயோடு
தென்னங் குரும்பைகள்
அவல் கடலை
பொரி உருண்டை
கொண்டைக்குப் பூ
கண்டாங்கி சேலை
குலுங்கி நடக்க வளையல் தந்தார்
தண்டை கொலுசுகள்
கண்டவர் மெச்சிட
சருமை வெள்ளிகள்
வாங்கிப் போட்டார்
தோட்டம் வருகிற
பாதையிலே கொஞ்சம்
தோசை பலகாரம்
வாங்கித் தந்தார்."

அதற்குப் பின்னால் காடுகளும் மலைகளும் செரிந்த மலை நாட்டுப் பிரதேசத்தை அடையும் வரை மேடு பள்ளமும் உயரமும் தான், உயர உயர ஏறும் மலைகளும் பயங்கர காடுகளும்தான். தமிழ் நாட்டிலிருந்து வந்த தொழிலாளர்கள் அது போன்ற பகுதிகளை என்றுமே பார்த்திருக்கவில்லை. மலைக் காடுகளை ஊடறுத்துச் செல்லவே அச்சப்பட்டார்கள். அந்த அச்சத்துக்கிடையில் புதிது புதிதாக திறக்கப்பட்ட தோட்டங்களுக்கு அழைத்துச் செல்லும் வரை— கரையை அடைந்தும் கதகாணிகள் தங்களை அதிகாரத் தோரணையோடு நடந்து கொண்டாலும்— மனங்கோணாமல்—நடத்திச் சென்றார்கள். அன்பு தோய்ந்த வார்த்தைகளுடன் அளப்பரிய உபசாரனைகளை செய்து வரவேற்றார்கள்.

போட்டு நடத்தியே
தோட்டம் வர அங்கு
பொழுது விடியவே
காத்து நின்றார்"

தோட்டம் வரும் வரைதான் கங்காணிகளின் அன்பு வார்த்தைகளும் ஆதரவான பேச்சுக்களும் தோட்டங்களுக்குள் நுழைந்தவுடன் தங்களை மாற்றிக் கொண்டு அழைத்து வந்த தொழிலாளர்களுக்கு ஆளும் 'குட்டி இராஜா'க்களானார்கள், பெரிய கங்காணிகள்.

## 4

பிழைப்பிற்காக தமது சொந்த ஊரைவிட்டு வந்தவர்கள் தாம் வருவதற்கு முன் பலர் சொன்ன அனுபவங்களையெல்லாம் வங்காளக் குடாவைக் கடந்து, மலைப் பிரதேசங்களை நோக்கி தமது பயணத்தை ஆரம்பித்தப்போது கண்கூடாகக் கண்டார்கள்: அனுபவித்தார்கள்

நாளோட நாளா
கோடாலி சத்தம்
குமறுதங்கே காட்டுக்குள்ளே

உறுமுமது கேட்டா
உறுமும் புலி சத்தம்
நரி ஊளையெல்லாம்
காட்டோடு அழிஞ்சதடி

என்று அன்றைய மலையகத்தை வர்ணித்திருப்பது இந்தப் பாடலின் வாயிலாக அறியலாம். இப்படி உறுமும் புலியும் ஊளையிடும் நரியும் கொட்டும் அறவழும் விஷ ஜந்துக்களும் வாழும் பிரதேசமாக அன்றைய மலையகம் இருந்தது. மழை கொட்டியது. பனி பெய்தது காற்று வீசியது மக்கள் வாழ்வதற்குத் தகுதியற்றப் பிரதேசமாகவே இருந்தது. அதோடு மாத்திரமல்ல மலேரியா காய்ச்சலையும் விஷ ஜுரத்தையும் பரப்பும் விஷ கிருமிகளையும் பரப்பும் உறைவிடமாகவும் இருந்தது.

(தொடரும்)

12-ம் பக்கத் தொடர்ச்சி

தது. ஆத்திரமும் பற்றி கொண்டு வந்தது.

எவ்வளவு மோசமான குணம் இது. அவர்களை வீடு பார்த்து கொண்டு வந்து குடியமர்த்தியதே நான், அவர்கள் அங்கு தங்கள் வாழ்க்கை அமைத்துக் கொள்ள உரிய உதவிகளையும் நானே செய்துக் கொண்டிருக்கிறேன் இது இவர்களுக்கு தெரியவில்லையா? இதுமட்டுமா? இலங்கையில் நாங்கள் ஒன்றாய் வாழ்ந்தவர்கள் ஒரே இடத்தில், ஒரே 'லயத்தில்' அடுத்தடுத்த வீடுகளில் எத்தனை வருடங்கள் வாழ்ந்திருப்போம அந்த நாட்களில் உறவுகள் பழக்கங்கள்? இது தெரியாதா? தெரிந்து புரிந்து கொள்ள முடியவில்லையா? இனமும், மதமும் தானு? மனிதாபிமானம்!

'ச்சே' நினைக்கவே வெறுப்பாக இருந்தது. அந்த வெறுப்போடு சபீனாவைப் பார்த்தேன்

அவள்—

தோற்றமே மாறியிருந்தது. தலையில் நீல நிறத்தில் பர்தா. முழங்கைவரை, சுருங்கம் வைத்து தைத்த பச்சை நிற ஜாக்கெட் பெரிய பூ போட்ட முண்டு அணிந்திருந்தாள்.

கல்லூரியில் படித்த போது அவள் இறுக்கமாக தைத்த முழங்கால் வரை உயர்த்த வெள்ளை கவுன், கலர் 'டை' வீட்டில் நீளப்பாவாடை, தாவணியே பார்த்தது. அதற்கு பின்னுலே சேலை கட்ட ஆரம்பித்தாள். அப்படி இருந்தவளா இப்படி?

இன்னும் அவள் அந்த கதவையேபிடித்துக் கொண்டு நின்றாள் வாசல்படியைத் தாண்டி வரவே இல்லை.

அவள் பழைய சபீனாவாக இல்லை

'நேற்று வந்தவர்களுக்காக பயப்பட வேண்டும்? அதுவும் என்னோடு பேச?

உள்வாசல்படியைத்தாண்டி முன்னறைக்கு வரவே பயப்படுகிறாள் அந்த அறைக்குள்ளேயே தனிமையில் கூட பேச அச்சப்படுகிறாள் துச்சமென மதித்து எதையும் தாண்டி வரும் துணிச்சல் அவளுக்கு இல்லை!

எப்படி அவளுக்கு எல்லாவற்றையும் மறக்க முடிந்தது துறக்க முடிந்தது? நினைவுகள் அனைத்தும் அந்த ஒரு கணத்தில் மனதில் தோன்றிக் கனக்கிறது.

அவள் புதியவொரு சபீனாவாக நின்றாள். அவளோடு நின்று பேச எனக்குப் பிடிக்கவில்லை.

"உங்க அப்பாவை வந்து பார்க்கிறேனு சொல்" என்று புறப்பட்டேன்.

வெறுப்பு, கசப்பு வேதனை சுமையில் அந்த குன்றிலிருந்து என்னால் இறங்கக் கூட சிரமமாக இருந்தது

அப்போது செந்நிறச் சூரியன் மேற்கு வானத்தில் இறங்க இருள் படர்ந்தது—அந்த இருளின், மஞ்சள் குளித்த பசுமையான தேயிலைக் குன்றுகள், மலைகள் கொஞ்சம் கொஞ்சமாக மறையத் தொடங்கியது.

(முற்றும்)




## உங்கள் முயற்சிக்கு பாராட்டுக்கள் !

இருள் சூழ்ந்த இந்த நெருக்கடியான காலத்தில் 'மறுவாழ்வு' காண ஓடி வரும் அகதிகளுக்கு ஆதரவளித்து—வழி காட்டத் துணிந்தமைக்கு பாராட்டு.

காலத்தின் கொடுமையால நலமுடன், நல்வாழ்வு வாழ்ந்த மக்கள் திடீரென அகதிகளாக உயிர் தப்பி ஓடி வருவோருக்கு ஆக்கமும், ஆதரவும் அளிக்க இங்குள்ள மக்களும், அரசும் குறிப்பாக மறுவாழ்வு அளிப்பதற்கென்றே நியமிக்கப் பட்டுள்ள சிறிய பெரிய அதிகாரிகளும் எவ்வாறு நடந்து கொள்கிறார்கள் என்பதை நான் கண்டு அறிந்தவன். இக்கொடுமைகள் போதாதென்று இவர்களுக்கு ஆதரவளிப்பதாக முன்வரும் 'நல்லவர்'கள் நாளடைவில் 'தரகர்'களாக மாறுவதால் இவர்களுக்கு ஏற்படும் துன்பங்கள் எத்தனை என்பதை நான் அறிவேன்.

சுமார் 50 ஆண்டுகளாக பர்மாவிலும், சிறப்பாக தென் கிழக்காசியா இலங்கை உட்பட பலநாடுகளில் வாழும் நம் மக்களின்-தமிழர்களின் நிலை குறித்து 1960-8-19ல் எடுத்துக் கூறியதின் காரணமாகவே நான் 1961ல் பர்மாவை விட்டு வெளியேற நேரிட்டது. இதன் பின் 'ஆசிய அகதிகள் குரல்' என தமிழ் ஆங்கில மொழியில் மூன்று, நான்கு ஆண்டுகளாக பத்திரிகை நடத்திய விபரம் தங்களுக்கு தெரிந்து இருக்கலாம். இத்தகு சுயநல மற்ற சேவைக்கு விரல் விட்டு எண்ணக் கூடிய சிலரைத் தவிர அனுதாபம் ஆதரவு காட்டுவோர் இல்லை. எரிகிற நெருப்பில் பிடுங்கியது வரை ஆதாயம் என்று இம்மக்களின் நெருக்கடிகளையும்-பத்திரிகைகள் மூலம் அயராது ஒலிக்கும் எதிரொலியையும் - பயன்படுத்திக் கொள்ளும் நண்பர்கள் பலர்

இத்துணை நெருக்கடிகளையும் தாங்கிக் கொண்டு, பத்திரிகை நடத்தும் தங்களை நெஞ்சாரப் பாராட்டுகிறேன். வாழ்த்துகிறேன்.

எரிகிற நெருப்பில் வீழ்ந்து உயிர் நீக்காது தப்பிப் பிழைத்து தாயகம் வந்தவர்கள், தாய் நாட்டில் நாய்களாக அலைவதைவிட இலங்கையிலேயே — சிங்களவர்களின் கொடுமைக்காளாகி சாவதே மேல் என்ற தலைப்பில் எழுதவதைக் காணும் போது, எம் போன்றோர் உள்ளம் கொதிக்கிறது. இங்கு நடக்கும் நாடகமோ வேறு "வந்தவர்களுக்கு வாழ்வு அளிக்க முடியாத இவர்கள், மறுவாழ்வு உதவிகளை பெற்றுக் கொடுக்க முடியாத அவர்கள் இலங்கைத் தமிழர் உரிமைகளுக்கு குரல் கொடுக்கிறார்கள் - கூட்டம் போடுகிறார்கள் - நிதித்திரட்டுகிறார் இந்த அவல நிலையை ஒழிக்க வேண்டும்-ஒழிய வேண்டும்.

நல் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

**-வீ ஹெர் டேவிட்**

ஆசிரியர்,
'தி ஓவர்சீஸ் இந்தியன்'
சென்னை-29.

O

## பாராட்டுக்கள்!

மக்கள் மறுவாழ்வு வாசிக்கும் வாய்ப்பு கிடைத்தது பலத்த முயற்சிகளின் விளைவே இதழ் வெளியீடு என்பதை விளங்கிக் கொள்ள நேரம் அதிகமாகவில்லை. உங்களது தொடர்ந்த முயற்சிகளுக்கு எனது பாராட்டுகள்!

**எம். வாமதேவன்**

இலங்கை.

O

## வாழ்த்துக்கள்!

மறுவாழ்வு தொடர்ந்து வெளிவரவும், வளர்ச்சி பெறவும் என் வாழ்த்துக்கள்! ஆதரவுகள்!!

**வீ பாலச்சந்திரன்**

திருச்சி—8

## மிகப்பெரிய சக்தியாகும்

பத்திரிகை ஒவ்வொன்றும் கால கிரமத்தில் கிடைக்கப் பெற்று பெரிதும் மகிழ்ந்தேன்.

மேலும் விறுப்பான அம் சங்களை சேர்த்து வெளியிட்டால் பெரிதும் சிறப்பாக இருக்கும். 'சட்ட ஆலோசனை' பகுதி பெரிதும் நன்மை பயப்பதாகும் மீண்டும் வெளியிடுங்கள்.

பத்திரிகையின் மூலம் தாயகம் திரும்பியோரை ஒன்று திரட்டி ஒரு முகப்படுத்த ஆவன செய்யுங்கள்.

**வே. சு கந்தன்**
சிவகங்கை

## வளர்ச்சி கண்டு மகிழ்ச்சி !

மக்கள் மறுவாழ்வு வளர்ச்சி பெற்றுள்ளது கண்டு மகிழ்ச்சியடைகிறேன். மேலும் வளர எனது இதயம்கனிந்த வாழ்த்துக்கள்.

**ஆர் தனகோபால்**
பவானிசாகர்
பெரியார் மாவட்டம்.

## பிரச்சனைகளை வெளிப்படுத்துகிறது !

தங்கள் பத்திரிகையின் மூலம் இலங்கையிலிருந்து வந்த தமிழர்கள் அவதியையும், பிரச்சனைகளையும் அறிந்து கொள்முடிகிறது. சிறப்பாக வெளிப்படுத்துகிறீர்கள். தங்கள் முயற்சிக்கு என் வாழ்த்துக்கள்

**கே எஸ் சுந்தரம்**
பெங்களூர்-24.

## வெற்றி வருக!

மக்கள் மறுவாழ்வினை தொடர்ந்து வாசித்து வருகிறேன். தொடர்ந்து வரவும், அதன் மூலம், நமது மக்கள் தொண்டில் தாங்கள் பல வெற்றிகளைப் பெறவும் வாழ்த்துகிறேன்.

**சந்திரபோஸ்**
சென்னை-17

## வளர்ந்தோங்குக!

'மக்கள் மறுவாழ்வு' மூலம் தங்களுடைய சீரிய நட்பணி தொடர்ந்து வளர்ந்தோங்க எங்கள் நல்லாசிகள் உரித்தாகட்டும்

**ஆர்-வி. ஐயாசாமி**
நெல்லூர்
ஆந்தரப்பிரதேசம் ○

## மறுவாழ்வு இயக்குனர்

மறுவாழ்வுத்துறையின் இயக்குனராக திரு.என். பத்மநாபன் இ ஆ ப, நியமிக்கப்பட்டிருக்கிறார். மறுவாழ்வு துறையின் இயக்குனராக இருந்த திரு.ஈ எஸ். டேனியல் குணநிதி இ.ஆ.ப அவர்களுக்கு பதில் இவர் தற்காலிகமாக நியமிக்கப்பட்டிருக்கிறார் கூட்டுறவு துணை செயலாளராக இருந்த இவர், திரு ஈ.எஸ். டேனியல் குணநிதி இ ஆ.ப. அவர்கள் வடாற்காடு மாவட்ட ஆட்சித் தலைவராக நியமிக்கப்பட்டதைத் தொடர்ந்து மறுவாழ்வுத்துறை இயக்குனராக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

வடை செய்யும் வரை மானியம் கொடுத்திட வற்புறுத்துகிறோம்.

7 தாயகம் திரும்பிய படித்த வாலிபர்களுக்கு தகுதிக்கேற்ப அரசு அலுவலகங்களிலும், பொதுத்துறைகளிலும் வேலை வழங்கிட வற்புறுத்துகிறோம்.

8. தாயகம் திரும்பியோர்களுக்கு முத்திரைச் சலுகை, மற்றும் நில சுத்தகிரைய பதிவதற்கான சலுகை, அரசு அறிவித்துள்ளது. இச்சலுகை இதர பகுதிகளில் அமுல் நடத்தப்படுவது போல இங்கும் (கொடைக்கானல்) அமுல் நடத்திட வற்புறுத்துகிறோம்.

காலை 10-00 மணிக்கு ஊர்வலத்திற்கு தாயகம் திரும்பியோர் சங்கத் தலைவர் திரு. எஸ்.வி லெட்சுமணன் தலைமை தாங்கினார். உண்ணாவிரதப் போராட்டத்தை, நீலகிரி தாயகம் திரும்பியோர் முற்போக்கு சங்கத்தின் செயலாளர் டி. பாலகிருஷ்ணன் அவர்கள் தொடங்கி வைத்து தலைமை தாங்கினார். மாலை 5-00 மணிக்கு திரு. த குருசாமி பி காம்., பி. எல், அவர்கள் முடித்து வைத்துப் பேசினார். முடித்து வைக்கும் போது, தா.தி சங்கச் செயலாளர் திரு. செபஸ்டியன், மக்கள் மறுவாழ்வு ஆசிரியர் டி. எஸ். ராஜு, ஏ. சிவானந்தன், ஆர். ராஜ்குமார், ரவி ஆகியோர் பேசினார்கள். ○

## நன்றி! நன்றி!!

20-8-84 அன்று தாயகம் திரும்பியோர் கூட்டுறவு மற்றும் நிதிவளர்ச்சி வங்கியின் பிரதிநிதித்துவ பேரவையின் சார்பாளர்கள் (டெலிகேட்கள்) தேர்தல் நடந்தது

திருச்சி தொகுதியில் பலத்த போட்டிகளுக்கிடையில் எங்களுக்காக பலர் உழைத்தார்கள் வெற்றி வாய்ப்பைப் பெற்றுக் கொடுத்தார்கள். அவர்களுக்கு எங்கள் **நன்றி! நன்றி!!**

இத்தேர்தலில் எங்களை வெற்றி பெறச் செய்வதில் முன் நின்ற பர்மா தமிழ் தலைவர் திரு எஸ் முத்துசாமி அவர்களுக்கும், பர்மா இலங்கை தமிழ் வியாபாரிகள் சங்க செயலாளர் திரு எஸ்.ஏ.வி.யாசின் அவர்களுக்கும், தாயகம் திரும்பியோர் சிறு வியாபாரிகள் முன்னேற்ற சங்கத்தின் மாவட்டச் செயலாளர் திரு மு. குமார் அவர்களுக்கும், மற்றும் திரு வீரய்யா, திரு கட்சி முகைதீன். திருவரம்பூர் திரு என். ராமையா, திரு. ராமன் அண்ணா நகர் திரு. கே. எஸ் நாராயணசாமி, திரு. கிருஷ்ணன் நாவல்பட்டு திரு சோலையப்பன், திரு ராமு. வீ. ஆர் எம். மாரிமுத்து செல்வம், துறையூர் திரு வீரப்பன் முசுறி திரு நல்லையா சுப்பிரமணியபுரம் திரு கணபதி ஆகியோர்கள் அனைவருக்கும் வெற்றி பெற்ற சார்பாளர்கள் சார்பில் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

எங்களுக்கு வெற்றியை தேடித்தர வேண்டும் என்பதாக ராணிப்பேட்டையிலிருந்து எங்களுக்காக வாக்கு வேட்டையாடிய ராணிப்பேட்டை (டெலிகேட்) திரு எஸ். ஆறுமுகம், திரு சுப்பையா, திரு தங்கவேல் ஆகியோருக்கும், பெரம்பலூர் பகுதியில் எங்கள் வெற்றிக்காக பெரிதும் உழைத்த அறந்தாங்கி திரு. எம் எஸ் டி. சந்திரசேகரம் ஆகியோருக்கும் எங்கள் மனமுவந்த நன்றியை வெற்றி பெற்ற சார்பாளர்கள் சார்பாக தெரிவித்துக் கொள்கிறேன்.

**டி-எஸ் ராஜு**

அனைத்து விதமான

- ஸ்கிரீன் பிரிண்டிங்
- பிளாஸ்டிக் கட்டிங் லெட்டர்ஸ்
- பித்தளை கட்டிங் லெட்டர்ஸ்
- ரப்பர் ஸ்டாம்ப்ஸ் வேலைகள்

தரமாக - குறைந்த கட்டணத்தில் செய்ய

**ஸ்டார்**
**ரப்பர் ஸ்டாம்ப் ஒர்க்ஸ் &**
**ஸ்கிரீன் பிரிண்டர்ஸ்**

5. B, சமஸ்பிரான் தெரு
திருச்சி-600 008.

உரிமை : ஆர். அழகிரி

Editor & Publishers : T. S. RAJU, Gangaiamman kovil Street, Madras-600 091. Printer : L.S. Srinivasan at Jai Kalidas Press, 29, B.E Colony, 4th Street, Madras-600 024.

Regd No. R.N 42556/83
Regd No. TN/MS(C) 712.

MAKKAL MARUVAZHVOO (Sep'84)
(Tamil Monthly)

# மக்கள் மறுவாழ்வு

தொடர்பு கொள்ள : 1. தெற்கு கங்கையம்மன் கோவில் 2-வது தெரு, சென்னை-600 094.

(முதல் பக்கத்தொடர்ச்சி)

முட்டு சாமான்களையும் இழந்து விட்டு பிச்சைக்காரர்களாக தவிக்கிறார்கள்.

குடும்ப அட்டையில் சாதி பற்றி குறிப்பிடவில்லை. இங்கு பிள்ளைகளை பள்ளியில்சேர்ப்பதற்கும ஹாஸ்டலில் இடம் பிடிப்பதற்கும சாதிச்சான்றிதழ் கேட்கப்படுகிறது. இவைகளை அதிகாரிகள் கொடுக்க மறுக்கிறார்கள், வருமான சான்றிதழ் கேட்கப்படுகிறது. வேலையின்றி தெருவில் அலைவோர் எவ்வாறு வருமானச்சான்றிதழ் கொடுக்க முடியும்?

ஒவ்வொரு குடும்பத்திற்கும் வீடு கொடுக்கப்படும் என்ற உங்கள் பரிந்துரைக்கு இங்கே மதிப்பில்லை. பட்டாவுடனான வீட்டுமனை தேவைஎன்கிறார்கள் அகதிகள் கொண்டுவரும் அற்ப தொகையில் வீட்டுமனை விலைக்கு வாங்க முடியுமா? மனுச் செய்யும் போது கண்டிராக்டருடனான உடன்படிக்கை, வீட்டுமனைப்பட்டா என்ஜினியர் வரைபடம ஆகியவைகளையும கொடுக்க வேண்டும இவைகளை எங்கு போய் பெறுவது. அத்துடன் வீட்டுக்கடன் முதல் தவணையையும இரண்டாந் தவணையையும் பெறுவதற்கு இலங்கையிலிருந்து வந்த ஓராண்டுக்குள் மனுச் செய்ய வேண்டுமென்ற நியதி இருக்கிறது

இந்நிலையில் அகதிகள் எதிர் நோக்கும் பல பிரச்சனைகள் தீர்வதற்கு தாங்கள் பின் வரும் நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படி வேண்டுகிறோம்.

ஃ இலங்கையிலேயே சாதி சான்றிதழை கொடுத்தனுப்ப வேண்டும்.

ஃ வருமான சான்றிதழைப் பொறுத்து நாம் எதும் சொல்வதற்கில்லை. கல்விச் சான்றிதழ்களின் தகுதியினை அங்கேயே உறுதிப்படுத்துதல் வேண்டும்.

## ரயில்வே தொழிலாளர் கோரிக்கை : வேலையை நிரந்தரமாக்குங்கள் !

"எங்கள் வேலையை நிரந்தரமாக்கி, தாயகந் திரும்பிய எங்களை, யுத்த காலத்தில் அளிக்கப்படும் உதவிகள் போல அளித்து, நடத்த வேண்டும்"

இவ்வாறு நாகர் கோவில் கன்னியாகுமரி டிவிஷனில் பணி செய்யும் தாயகம் திரும்பிய தொழிலாளர்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு எழுதியுள்ளது.

இவர்கள் சிறிமா- சாஸ்திரி ஒப்பந்தத்தில் தாயகம் திரும்பியவர்கள் 47 குடும்பங்களுக்கு மறு வாழ்வு அளிக்கும் வகையில், 6-6-78ல் நாகர் கோவில் - திருவனந்தபுரம் அகல இருப்புப் பாதை அமைப்பு ஊழியர்களாக நியமிக்கப்பட்டார்கள் அதில் தொடர்ந்து 47[குடும்ப] ஊழியர் பணியாற்றி வந்தனர்.

மூன்றரை ஆண்டுகளாக தற்காலிக ஊழியர்களாக இருந்து வந்த இவர்களை நாகர்கோவில்—திருநெல்வேலி ரயில்வே நிர்வாகம் 5-1-82) வேலை நீக்கம் செய்தது. மீண்டும் வேலை கொடுக்க வேண்டுமென்றும், வேறு பல கோரிக்கைகளையும் முன் வைத்து 8-5-82 முதல் நாகர் கோவில் ஆட்சியாளர் அலுவலகம் முன் உண்ணா விரதம் இருந்தும் அவர்களது கோரிக்கைகளுக்கு உரிய வெற்றி கிடைக்கவில்லை.

இதைத் தொடர்ந்து 8-6-82ல் நாகர் கோயில்-கன்னியாகுமரி ரயில்வே டிவிஷனில் நியமிக்கப்பட்டார்கள். 18 10-82லிருந்து சி.பி.சி. கிரேட்டில் தொடர்ந்து பணி செய்யப் பணிக்கப்பட்டார்கள்.

தாயகம் திரும்பிய இத் தொழிலாளர் குடும்பங்களில் ஒருவருக்கு மட்டுமே வேலை ஆதலால் தங்களின் வேலையை நிரந்தரமாக்க வேண்டும் என்றும், யுத்த காலத்தில் உதவிகள் அளிக்கப்படுவது போது தங்களுக்குரிய உதவிகளை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டுள்ளனர். O

ஃ உடன்படிக்கையை முழுவதுமாக தெரிந்தவர்களை மட்டுமே புனர்வாழ்வு அதிகாரிகளாக நியமிக்க தாங்கள் இந்திய அரசுக்கு சிபார்சு செய்ய வேண்டும.

ஃ அகதிகளில் படித்தவர்களை புனர்வாழ்வு தொடர்பான வேலைகளுக்குநியமனம் செய்தல் வேண்டும. சக அகதிகளின் பேரில் பாச உணர்வோடு அவர்கள் பாடுபடுவார்கள்.

ஃ மலைத் தோட்ட தேயிலைப் பகுதிகளில் குமாஸ்தா போன்ற சிறு ஊழியங்கள் அனைத்தும் படித்த அகதிகளுக்கே கொடுக்கப்படல் வேண்டும்.

ஃ இந்திய அரசு வழங்கும் அனைத்து சலுகைகளை முன்னுரிமைகளையும் அரசுமட்டத்தில் உள்ள எல்லா மேலதிகாரிகளுக்கும் விளக்க வேண்டும். அகதிகள் புதுவாழ்வு பெற தேவையான ஒத்துழைப்புக்களுக்கு உத்தரவாதம் அளிக்கப்பட வேண்டும் என கோரியுள்ளது. O

## பங்கீட்டு அரிசி வழங்குவதல் மோசடி !

திருச்சி, கொட்டப்பட்டு முகாமில் அரிசி வழங்குவதில் மோசடி செய்யப்படுவதாக புகார் தெரிவிக்கப்படுகிறது.

தாயகம் திரும்பும் மக்களுக்கு உதவி செய்யும் வகையில், தாயகம் திரும்பிவோர் முகாமிலும் சலுகை விலையில் அரிசி வழங்கப்படுகிறது கிலோ 57 காசுக்கு ஒரு வாரத்திற்கு ஒரு ஆளுக்கு 2 கிலோ 400 கிராம் வழங்கப்படுகிறது. குடும்பத்தில் 8 வயது குறைந்தவர்களுக்கு 1 கிலோ 40 கிராமும் வழங்கப்படுகிறது.

வழங்கப்படும் அரிசியை, மோசடி செய்து குறைத்துக் கொடுப்பதாக புகார் தெரிவிக்கப்படுகிறது 10 கிலோ அரிசி வழங்கினால் அதில் 7 அல்லது 8 கிலோதான் இருக்கிறதாம்.

திருச்சி அமராவதி கூட்டுறவு விற்பனை சங்கத்தினரால் இந்த அரிசி விநியோகிக்கப்பட்டு வருகிறது.

பலமுறை புகார் செய்யப்பட்டுக் ஓரிரு முறை கையும் களவுமாக பிடித்துக் கொடுக்கப்பட்டும் தொடர்ந்து இந்த மோசடி நடந்து வருகிறதென்று தெரிகிறது

விநியோகத்தின் போது, அரிசி குறைத்து கொடுப்பது குறித்து தாயகம் திரும்பியோர் ஒருவர் கேட்ட போது அவர் அவர்வீட்டு வாசல் வரை துரத்தி வந்து விட்டாராம். விநியோகத்தில் சம்பந்தப்பட்டவர்கள் ஆட்களை வைத்துக் கொண்டு அரிசி வழங்குவதாக தாயகம் திரும்பியோர் புகார் தெரிவிக்கின்றனர். O